# ஜாமக்காரன்


WATCHMAN

VOLUME - 2 ISSUE - 6


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களுக்கு,**

**உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சமாதானம் கூறுகிறேன்.**

' **இந்தியாவில்தமிழ்நாட்டில் தேர்தல் நடந்து முடிந்து முதல்வராக செல்வி.ஜெயலலிதா அவர்கள் பெருப்பேற்றுள்ளார். இது எதிர்ப்பார்த்த முடிவுதான். மேலும் அதிக பெரும்பான்மை அவருக்கு கிடைக்காது என்பதும் நாம் எதிர்ப்பார்த்ததுதான். ஆனால் கலைஞர்.கருணாநிதி அவர்களின் திமுக இத்தனை பெரும்பான்மை MLAக்களின் அதிக எண்ணிக்கையுடன் எதிர்கட்சியாக வருவார்கள் என்பதை நான் யூகிக்கவில்லை. அதே சமயம் மற்ற கட்சிகள் யாவும் இந்த தேர்தலுக்கு பிறகு தலைதூக்கமுடியாதளவு தோற்றுபோகும் என்பதை மிகவும் எதிர்ப்பார்தேன்.**

' **அப்படியே முழு இந்தியாவிலும் இனி காங்கிரஸ் மீண்டும் இந்தியாவை கூட்டணி மூலமாகவும்கூட ஆளமுடியாத அளவு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மீண்டும் காங்கிரஸ் முழு இந்தியாவிலும் புதிதாக வளர்ச்சிபெற வேண்டுமானால் சோனியா, ராகுல்காந்தி இல்லாத ஒரு நல்ல தலைமையை காங்கிரஸ் தெரிந்தெடுக்கவேண்டும். ராஜீவ்காந்தி மகள் திருமதி.பிரியங்கா அவர்கள் காங்கிரஸ் தலைமை பெருப்பெடுத்தால் ஒருவேளை காங்கிரஸ் உயிர்பெறலாம். அதிலும் அவரின் கணவரின் ஊழலை பகிரங்கமாக அறிவித்து கணவரை கட்சியிலிருந்து ஒதுக்கி வைத்து பிரியங்கா மட்டும் காங்கிரஸ் கட்சியின் பொருப்பெடுத்தால் மட்டுமே காங்கிரஸ் உயிற்பெரும். ஆனால் அது நடைபெறும் சாத்தியகூறு இல்லை.**

' **BJPக்கு சமமான சரியான புதிய கூட்டணி உருவாவதுதான் இந்தியாவுக்கு நல்லது. தமிழ்நாட்டை பொருத்தவரை காங்கிரஸ் கட்சி இனி உருபடாது. பாண்டிசேரியிலும் அப்படியே!**

**மறுபடியும் ஒரு பெருந்தலைவர்.காமராஜ், திரு.கக்கன், திரு.லால்பகதூர்சாஸ்திரி போன்ற தியாகிகள் எழும்பவேண்டும். இப்போதுள்ள காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர்கூட**


# ஜூன் 2016

அப்படிப்பட்ட தலைவர்களாக உருவாகவே முடியாது என்பதை திட்டவட்டமாக கூறலாம்.

' இந்தியாவின் கேரள மாநிலத்தில் இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் ஜெயித்து ஆட்சியை பிடித்துள்ளார்கள். இது வழக்கமாக கேரளமக்கள் 5 வருடம் காங்கிரஸ், 5 வருடம் கம்யுனிஸ்ட் என்ற கணக்கில் பேசி வைத்ததுபோல் ஆட்சி அமைக்க தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் இம்முறை கம்யுனிஸ்ட் ஆட்சிக்கு முதல்வராக திரு.பிரணய் விஜயன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் தலைமை முன்னாள் முதல்வர் திரு.அச்சுதானந்தன் போல் இருக்காது. இவர் தென்னை மரத்திலிருந்து கள் இறக்கும் கூலி தொழிலாளியின் மகன். மிகவும் கஷ்டப்பட்டு முன்னேறி இந்த ஸ்தானத்துக்கு வந்துள்ளார். பிடிவாத சுபாவம் இவரின் பெரிய பலவீனமாகும். ஆனால் இவர் ஆட்சியில் நல்லது நடக்கும் என்று கேரள மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

அண்டை மாநிலங்களுடன் இணக்கமாக இருப்பார் என்று எண்ணுவதற்கு முல்லை பெரியார் அணை பெலத்தோடுதான் இருக்கிறது என்று வெளிப்படையாக பேசியிருக்கிறார். இது ஒரு நல்ல அடையாளம் காங்கிரஸ் கட்சியில் மூடப்பட்ட சாராய கடைகளை மறுபடியும் திறக்கமாட்டோம் என்று இவர் கட்சி மந்திரி கூறியதும் கேரளா நாட்டுக்கு நல்லதாகும்.

' மேலும் முதல்வர் பிரணய் விஜயன் கூறியதாவது: தன் கட்சிக்காரர்கள் யாரானலும் தன் பெயரை உபயோகித்து அரசாங்க அலுவலகங்களில் காரியம் சாதிக்க முயன்றால் உடனே அந்த விவரம் தனக்கு அறிவிக்கவேண்டும் என்ற முதல் கட்டளையிட்டுருப்பது கேரளத்தில் ஒரு நல்ல ஆட்சியை கொண்டுவருவார் என்பதற்கு அடையாளமாக கருதுகிறார்கள். எப்படியோ நடந்த தேர்தல் முடிவுகள் கேரளத்துக்கும், தமிழ்நாட்டுக்கும்,பாண்டிசேரிக்கும் நல்லது நடந்தால் போதும். ஜெபிப்போம்.

' இனி CSI, லுத்தரன் பிஷப்மார்களுக்காகத்தான் கிறிஸ்தவர்கள் அதிகம் ஜெபிக்கவேண்டியது அவசியமாகிறது. எங்கும்ஊழல், எதிலும்ஊழல் என்று பல பிஷப்மார் தலைமையில் சபை மக்களும், ஆயர்களும் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

' ஒருபிஷப் நடத்திய தேர்தல் தில்லுமுல்லுகளை போலீஸ் தலைமையே கண்டுபிடித்து பிஷப்பையும் கூடஉள்ள பொருப்பாளர்களையும் போலீஸ் லாக்கப்பில் வைத்து அதில் பிஷப்பை மட்டும் லாக்கிப்பிலிருந்து இரவோடு இரவாக சில கிறிஸ்தவ அரசாங்க வக்கீல்களின் சிபாரிசு பெயரில் வெளியே கொண்டு வந்துள்ளார்கள். பல மாதங்கள் சிஎஸ்ஐ டையோசிஸ் அலுவலகத்துக்கு வரக்கூடாது என்று தடை உத்தரவும் பிறப்பித்தார்கள். அந்த சமயம் போலீஸ் உயர்அதிகாரிகள் பிஷப் அவர்களை நிற்க வைத்து அவர் செயலை கண்டித்து பேசியது பிஷப் என்ற உயரிய ஸ்தானத்துக்கு எத்தனை அவமானமான காரியம்.

' அரசியலைவிட மிக கேவலமாகபிஷப்மார் பொய்பேசி, கிறிஸ்தவ சபை தேர்தல்களில் பல ஏமாற்று வேலைகளும் தில்லுமுல்லுகளையும் செய்து பிஷப்மார் போலீஸில் கையும் களவுமாக பிடிப்பட்டது சிஎஸ்ஐ சபைகளுக்கு பெருத்த அவமானம். இனியாவது இவர்கள் திருந்தி தேவ பயத்தோடு நடக்க நாம் ஜெபிப்பதை தவிர வேறு ஒன்றும் செய்யஇயலாது.

' 10வகுப்பு தேர்ச்சி பெற்று புதிய வகுப்புக்கு செல்லும் நம் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன். அப்படியே 12 வகுப்பு தேர்ச்சி பெற்ற பிள்ளைகளின் கல்லூரி சேர்க்கைக்காக ஜெபிக்கிறென். தோற்றுப்போன பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறேன். அவர்கள் சோர்ந்துபோகாதபடி கர்த்தர்

**அவர்களை பெலப்படுத்தி ஞானத்தையும் படிப்பில் உற்சாகத்தையும் கொடுத்து பெற்றோர்களை சந்தோஷப்படுத்தும் பிள்ளைகளாக கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.**

‘ **பள்ளி-கல்லூரி சேர்க்கைக்கு பணம் மிகவும் அதிகம் தேவைப்படும், இந்த நெருக்கத்திலும் ஜாமக்காரன் ஊழியத்தில் பணக்குறைவு ஏற்படாமல் தொடர்ந்து பணஉதவி செய்த அத்தனை வாசகர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.**

‘ **மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.**

‘ **தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவகிருபையும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக. ஆமென்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

# ஆஸ்ட்ரேலிய ஊழியம்

2016 அக்டோபர் முதல் கூட்டம் மெல்பர்ன் என்ற மாநிலத்தில் மலையாள பாஷை பேசும் CSI ,மார்தோமா சபை மக்களின் சபையில் பேசுகிறேன். தமிழ் சபை மக்கள் இப்போதே தேதிகள் குறிப்பிட்டு எழுதினால் தேதிகளையும், பிரயாணங்களையும் ஒழுங்குப்படுத்த முடியும்.

‘ உடனே இமெயில் மூலம் அல்லது கடிதம்மூலம் தாமதப்படுத்தாமல் கூட்டம் நடத்த உங்கள் சபைக்கான தேதிகளை தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

‘ **ஆஸ்ட்ரேலியா வந்தபின் தேதிகள் கேட்டால் நிச்சயம் கொடுக்க இயலாது.**

நான் போக-வர உள்ள டிக்கட் ஏற்பாடுகள் மெல்பர்ன் மலையாள CSI சபைகள் பொருப்பெடுக்கிறது.

ஆகையால் என் பயண செலவுக்காக ஆஸ்ட்ரேலியயாவின் எந்த மாநிலத்தில் (Provence)உள்ள தமிழ் சபைகளும் ஏற்க தேவையில்லை.

‘ வழக்கப்படி ஜாமக்காரன் வாசகர்களை தனியாக குடும்பமாக சந்தித்து ஜெபிக்க விரும்புகிறேன்.

என்னுடைய இமெயில் முகவரி:

E-Mail: jamakaran@yahoo.com

# அந்நியபாஷை குழப்பம்

# அத்தியாயம் - 3

## (கடந்த மே மாதம் சிலோன் (TPM)பெந்தேகோஸ்தே சபை பாஸ்டரின் கடிதத்தை ஜாமக்காரனில் வெளியிட்டிருந்தேன்)

## சிலோன் பெந்தேகோஸ்தே (TPM) பாஸ்டரின் கடிதத்துக்கு என் பதில்:

**பரிசுத்த ஆவியானவர் எப்போது மனிதனுக்குள் வருகிறார்?**

எபே 1:13ன்படி வசனத்தைகேட்டு(மனந்திரும்பும்போது)அதாவது **விசுவாசிகளான** போது ஆவியானவரை பெற்றுக்கொள்கிறோம் என்ற வார்த்தையை பாஸ்டர் அவர்கள் **காத்திருப்பு** கூட்டத்தில் தான் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளமுடியும் என்று நாம் நம்புவதற்கு கூடவே **அப் 2ல் சீடர்கள் மேல்அறையில் காத்திருந்த முறைப்படி அவர்கள் முத்திரை போடப்பட்டார்கள்** என்று கூற முயலுகிறார். **வசனத்தை** எப்படி யெல்லாம் தங்கள் **TPM சபை உபதேசத்துக்கு ஏற்றவாறு** மாற்றி அர்த்தம் கொள்ள வைக்க முயலுகிறார் என்பதை இதை வாசிக்கிறவர்கள் விளங்கிக்கொள்ளலாம்.

அதற்கு KJV ஆங்கில மொழிபெயர்ப்பை ஆதாரமாக கொண்டுவருகிறார் After That Ye Belived என்பதற்கு ஒருவன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பிறகு **சபையில் வந்து** சில நாட்கள் அல்லது **சில மாதங்களில்தான்** அவன் **பரிசுத்த ஆவியை** பெறுவான் என்று அர்த்தம் கொடுக்க முயலுகிறார். இது ஆதியாகமத்தில் கர்த்தர் சொன்ன வார்த்தையையே பிசாசு மாற்றி வேறு அர்த்தம் கொள்ளுமாறு ஏவாளிடம் கூறி நம்பவைத்ததற்கு ஒப்பானது ஆகும். இது மிகவும் ஆபத்தானது. இப்படி சொந்த இஷ்டத்துக்கு வசனத்தை வியாக்கியானக்கிக்கூடாது.

**பாஸ்டர்.ராஜன்** அவர்கள் குறிப்பிட்ட KJV மொழிபெயர்ப்பு மட்டுமல்ல, William,Back, KJV ஆகிய எல்லா மொழிபெயர்ப்புகளிலும் **வசனத்தைகேட்டு இரட்சிக்கப்பட்டவுடன்** என்ற அர்த்தத்தில்தான் அனைத்து மொழிபெயர்ப்புகளும் கூறுகிறது. அதைவிட முக்கியமாக மூல பாஷையை கவனியுங்கள். அதிலும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட உடனேயே பரிசுத்த

ஆவியினால் முத்திரையிடப்பட்டீர்கள் என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அடுத்த பாராவில் நான் எழுதியதை சுட்டிக்காட்டி இவரே மாட்டிக்கொண்டார். 1கொரி 12:3 பரிசுத்த ஆவியான வராலேயன்றி **இயேசுவை கர்த்தர்** என்று ஒருவரும் சொல்லக்கூடாது என்பதாகும். இதை வேறு வழியில்லாமல் ஒத்துக்கொண்டார். **நீங்கள் எழுதியது சரிதான்** என்றும் எழுதியி ருக்கிறார். ஆனால் அதை தொடர்ந்து மறுபடியும் தன் சபை உபதேசத்தை உறுதிப்படுத்த தவறான கருத்தை வலியுறுத்துகிறார்.

இரட்சிக்கப்படும்போது ஆவியானவரின் உதவி அல்லது கிரியை மனிதனுக்குள் போகாது. அப்படியானால் எப்படி ஒருவன் **இயேசுவை கர்த்தர்** என்று கூறமுடியும். எப்படி மனந்திரும்ப முடியும். சபைக்குள் வந்து அநேக நாள் கழித்து **காத்திருப்பு கூட்டத்தின்** மூலமாகத்தான் ஆவியானவர் உள்ளே வருவாரா? பாஸ்டரின் வியாக்கியானத்தில் உள்ள தவறை வாசகர்கள் விளங்கிக்கொண்டீர்களா?

இரட்சிக்கப்பட்ட எல்லாருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் உண்டு என்பது தவறு என்று பாஸ்டர் ராஜன் கூறுகிறார். இதற்கு ரோ 10:9, யோ 14:17 வசனத்தை குறிப்பிடுகிறார். ரோ 10:9ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால், வாயினால் அறிக்கையிட்டு உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் என்று பவுல் கூறிய வசனத்துக்கும் இரட்சிக்கப்படும்போது பரிசுத்த ஆவியானவர் உள்ளே வந்துவிடுகிறார் என்பதற்கும் என்ன சம்பந்தம். வசனத்தை கேள்விப்படாமல் எப்படி இரட்சிக்கப்படமுடியும் இரட்சிக்கப்படாமல் ஒருவர் எப்படி வாயினால் அறிக்கை செய்யமுடியும்?.

அடுத்தது, யோ 14:17ல் அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளேயேயி ருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். இந்த வசனத்துக்கும் **இரட்சிக்கப்பட்டஉடன் ஆவியானவர்** மனிதனின் மனதின் உள்ளே வருவதில்லை என்பதற்கும் என்ன சம்பந்தம்?. மனந்திரும்பின சீஷர்களோடு இயேசு பேசும்போது மனந்திரும்பின உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை நீங்களே அறிவீர்கள் என்றுதானே இயேசு கூறுகிறார். பவுலும் ரோமர் 8ம் அதிகாரம் முழுவதிலும் எழுதியதை வாசித்துப்பாருங்கள். **உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை நீங்களே அறிவீர்களே!** என்கிறார். இதற்கு **அந்நியபாஷை அடையாளமாக** இருக்க வேண்டியதில்லையே!

**அந்நியபாஷை** பரிசுத்தாவியானவரின் **முதல் அடையாளம்** என்கிறார். இப்படி இவர் மட்டுமல்ல மற்ற ஊழியர்கள் எல்லாரும் முதல் அடையாளம், **இரண்டாம்** அடையாளம் **மூன்றாம்** அடையாளம் என்று கூறி வேதம் போதிக்காத உபதேசத்துக்குள் இவர்கள் யாவரும் சென்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட இவர்களை எப்படி புரிய வைப்பது? பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கத்தில் அப்போஸ்தல நடபடிகைகளில் அன்று **பற்பல** பாஷைகளில் பேசியதைக்குறித்து பேதுரு பேசும்போது இப்போது **காண்கிறதும், கேட்கிறதுமாகிய** இதை பொழிந்தருளினார் என்ற வார்த்தைக்கு இவர்கள் அதாவது **காண்கிறதும்,கேட்கிறதும்** என்று கூறிய இரண்டு வார்த்தைகளைக் அந்நியபாஷைக்கு அடையாளமாக சுட்டிக்காட்டுகிறார். இதனால்தான் **பரிசுத்தஆவியை** பெற்றுக் கொண்டவர்களுக்கு அந்நியபாஷையை அடையாளம் என்கிறோம் என்கிறார்.

இவ்வளவு அனுபவம் பெற்ற இவர் சரித்திர சம்பந்தமான பரிசுத்தாவியானவரின் இந்த முதல் இறக்கத்தில் ஏற்பட்ட இந்த இரண்டு காரியங்களை மட்டும் நேரிடையாக எடுத்துக்கொண்டு இந்த இரண்டு காட்சிகளை கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு அடையாளமாக குறிப்பிடுகிறார். ஒரு வசனத்தை **வாசிக்கும்போது மேலேயும் கீழேயும் வாசித்து எந்த** காலத்தில் நடைபெற்றது. எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது! எதற்காக அந்த பாஷைகள் பேசப்பட்டது என்று இவர்களால் கணிக்க முடியவில்லையே!. காரணம் இவர்களுக்கு வேதாகம கல்லூாரி படிப்பின் அடிப்படை அனுபவம் இல்லை.

இதன்மூலம் இவர்களின் வேத வாசிப்பு முறையே சரியில்லை என்றும் கூறுகிறேன். வேதத்தை எப்படி தியானிப்பது அல்லது ஆராய்வது என்ற அடிப்படை ஞானமே இவர்களுக்கு இல்லை என்பதால்தான் எல்லா வசனங்களையும் மிகவும் பிழையாகவும், இவர்களுக்கு சாதகமாகவும் விளங்கிக் கொள்கிறார்கள். இந்த குறிப்பிட்ட TPM சபை மட்டுமல்ல, எல்லா பெந்தேகோஸ்தே சபைகளின் பாஸ்டர்களுக்கும் வேத வசனத்தை ஆராயும்முறை மிகவும் தவறானதாக இருக்கிறது.

குறிப்பாக எல்லா பெந்தேகோஸ்தே பாஸ்டர்மார்களுக்கும் **வேதாகம கல்லூரி படிப்பின் அனுபவம்** இல்லாததால் ஏற்பட்ட குழப்பம்தான் இதற்கு காரணம் என்று விளங்குகிறது. இதன் காரணமாக வேதத்தின் சரித்திரம் இவர்களுக்கு தெரியவில்லை. AOG சபைகளுக்கு மட்டும் இப்போது வேதாகம கல்லூரி மதுரையிலும், பெங்களூரிலும் இருக்கிறது. இந்த கல்லூரியிலும் அந்நியபாஷை என்ற பிழையானதும் வசன அடிப்படையில்லாததுமான உபதேசத்தை மையமாக கொண்டே **கல்லூரி சேர்க்கை** இருப்பதால் இவர்களின் கல்லூரி படிப்பு பிழையான உபதேசத்துடன் அமைந்துள்ளது.

‘ ஏசா 28:11ம் வசனத்தை இவர்கள் **அந்நியபாஷையாகவே** எடுக்கிறார்கள். இதை **தீர்க்கதரிசனம்** என்று பாஸ்டர்.ராஜன் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இவரோ 1 கொரி 14:2யும், ஏசா 28:11யும் ஒன்றாக இணைத்தே பேசுகிறார். ஆகவே இவர் எழுதிய கடிதத்துக்கு வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் கொடுத்து நேரத்தை வீணாடிக்காமல் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பிலிருந்து அ,ஆ,இ,ஈ என்று சொல்லிக் கொடுப்பதுபோல இவர்களுக்கு சொல்லி கொடுக்கவேண்டியது அவசியம் என்று உணருகிறேன்.

ஏசா 28:11ம் வசனத்தை **அந்நியபாஷைக்கு** ஆதாரமாக யார் எடுக்கிறார்களோ, அது எவ்வளவு **பெரிய ஊழியராக இருந்தாலும்,பாஸ்டராக இருந்தாலும்** அவர்களுக்கு வேத வசனத்தை ஆராயவோ, வியாக்கியானிக்கவோ தெரியவில்லை என்று தைரியமாக கூறலாம்.

அதேபோல அப் 2ம் அதிகாரத்தில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கத்தில் சீஷர்கள் பேசியது ஒரே ஒரு பாஷைஅல்ல. ஒரே ஒரு பாஷையானால் பாஸ்டர் கூறுவதைப்போல அந்த பாஷையை அறியாதவனுக்கு அவன் பேசியது **அந்நியபாஷை** என்று கூறலாம். ஆனால் அன்று ஒரு சீஷனுடைய வாயிலிருந்து ஒரு

பாஷை அல்ல **பற்பல பாஷைகள்** வெளிவந்தன. அப்படி ஒவ்வொரு சீஷனுடைய வாயிலிருந்தும் வெளிவந்தது பற்பல பாஷை ஆகும். **அத்தனை பாஷைக்கும் அர்த்தம்** இருந்தது. மேலும் அந்த பாஷை பேசும் நபர்கள் அங்கு இருந்தார்கள் என்பது தெளிவு.

‘ வேதத்தில் உள்ள Parallelism என்பது ஒரு கருத்தை இரண்டு இரண்டு வார்த்தைகளில் விளங்கவைப்பது. ஒரு வார்த்தையை உறுதிப்படுத்த எபிரேயர்கள் அப்படி எழுதுவார்கள். மெய்யாகவே! மெய்யாகவே! நான் உங்களுக்கு சொல்லுகிறேன் என்று இயேசு கூறினார். ஆமென்! ஆமென்! என்று இரண்டுமுறை உபயோகிப்பது **வார்த்தையை உறுதிப்படுத்துவதாகும். ஜலத்தினாலும், ஆவியினாலும், ஆவி-அக்கினி** ஆகிய இவைகள் எல்லாம் பரிசுத்த ஆவியானவரை குறிக்க Parallelism என்ற முறையில் உபயோகிக்க பயன்படுத்தப்பட்டதாகும். இதை தமிழில் **ஒருபோகும் நிலை** என்று கூறலாம்.

**ஜலத்தினாலும்,ஆவியினாலும் பிறவாவிட்டால் என்ற பரலோகம் போகமுடியாது** என்பதை **ஞானஸ்நானத்துக்காக** உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தையேயல்ல. இந்த குறிப்பிட்ட வார்த்தையை கூறி ஜனங்களை பயமுறுத்தியே ஞானஸ்நானம் எடுக்க வைத்துவிடுவார்கள். இதற்கு பயந்தே பலர் ஞானஸ்நானம் எடுத்து விடுவார்கள். இதுவும் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்மார்கள் மக்களை ஞானஸ்நானம் எடுக்கவும் மக்களை பயமுறுத்துவதற்கும் உபயோகப்படுத்தும் ஏமாற்று வசனமாகும்.

‘ இப்படி பல வசனங்களின் உண்மை அர்த்தத்தை இவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். சபையில் சபை விசுவாசிகள் அந்நியபாஷையில் பேசிக்கொண்டிருக்கும் போது வேகமாக பாடல் பாடுபவர்கள், அப்போது **டிரம் அடிப்பவர்கள்,சபை மக்கள் பரவச உணர்வின் உச்சநிலை எட்டும்போது வாத்திய கருவிகளை இயக்குபவர்களுக்கு பாஸ்டர் ஒரு இரகசிய** செய்கை காட்டுவார்! அதை புரிந்து டிரம்,வாத்திய கருவிகள் வாசிப்பது நிற்கும்- உடனே விசுவாசிகள் அந்நியபாஷை பேசுவதையும் நிறுத்துவார்கள்.

இது **ஆவியானவரின் கிரியையா?** என்று இதைக்குறித்து பாஸ்டரிடம் கேட்டு எழுதியதற்கு எனக்கு அவர் எழுதிய பதில் கடிதத்தில் அது சபையின் **முக்கிய ஒழுங்காகும்** என்கிறார். மேலும் அவர் இதை குறிப்பிட்ட எனக்கு எழுதும்போது சபையில் எல்லாரும் **அந்நியபாஷையில்** பேசிக்கொண்டேயிருந்தால் எப்போது கூட்டத்தை? முடிப்பது? ஆராதனையை எப்போது முடிப்பது?.

ஆகவேதான் பாஸ்டர் **பேச சொல்லும்போது** பேசுவதும், **நிறுத்த சொல்லும் போது** நிறுத்தவும் செய்யமுடிகிறது என்கிறார். இதை **சபையின் ஒழுங்கு** என்று கூறுகிறார்.

ஆக ஒன்று தெளிவாக விளங்குகிறது! இவருடைய சபையின் விசுவாசிகளை நோக்கி பாஸ்டர் **பேச சொன்னால்** அந்நியபாஷையில் பேசலாம். பாஸ்டர் **நிறுத்த சொன்னால்** அந்நியபாஷையை நிறுத்தலாம். இதை வைத்தே இது ஆவியானவரின் கிரியை அல்ல என்பது தெளிவாக விளங்குகிறது அல்லவா?.

‘ மேலும் கொட்டு(டிரம்) அடித்து வேகமாக பாடும் பாடலை திரும்பதிரும்ப பாடி ஸ்தோத்திரத்தை வேவேகமாக திரும்பதிரும்ப சொல்லவைத்து அந்நியபாஷை என்ற பெயரில், அபிஷேகம் என்ற பெயரில் சபை மக்களை உளரவைக்கும் முறை TPM **பாஸ்டர்.ராஜன்**

அவர்கள் எங்கள் சபையில் நடக்கும் மிகவும் தவறான ஏற்பாடு ஆகும் என்று ஒத்துக்கொண்டவரின் வீஆ சபைகளில் அப்படிப்பட்ட போலி பாஷை பேசும் ஏற்பாடு தொடருகிறதே- அதை தன் சபையிலாவது தவறு என்று அவர் போதிக்ககூடாதா? இன்று அந்த வேகமாக பாடும் பாடலும் இசைக்கருவிகளும் ஸ்தோத்திரத்தை திரும்பதிரும்ப சொல்லும் வழக்கமும் அனைத்து பெந்தேகோஸ்தே சபைகளிலும் காணப்படுகிறதே!

ஆனால் இவைகளை **நியாயப்படுத்த** TPM **பாஸ்டர்.ராஜன் அவர்கள் இது சபையின் ஒழுங்கு** என்கிறார்.

## இரண்டு யுகங்கள்:

பொதுவாக எல்லா பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களுக்கும் வேதத்தின் சரித்திரத்தில் ஏற்றுக்கொள்ள விரும்பாத இரண்டு விஷயங்கள்:

1). **பழைய ஏற்பாடு** என்பது யூதர்களுக்காக எழுதப்பட்டது. இது **முதல் யுகம்** என்று அழைக்கப்படுகிறது.

2). **புதிய ஏற்பாடு இரண்டாவது யுகம்** என்று கூறலாம். இதில் சுவிசேஷ புத்தகங்கள் இயேசுவை அறியாத உலக மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க எழுதப்பட்டது. **அப்போஸ்தல நடபடிகள், நிருபங்கள்** ஆகிய யாவும் **கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட** அனைத்து உலக மக்களுக்காக எழுதப்பட்டது. இது **இரண்டாம் யுகம்** என்பார்கள். இதை மனதில் வைத்து பரிசுத்த ஆவியானவரைப்பற்றி தியானித்தால் மட்டுமே சரியான விளக்கம் கிடைக்கும்.

1கொரி 14:12 வசனத்துக்கும், அப் 2ல் **பற்பல பாஷையின் வரலாற்று** விளக்கத்தையும் குறித்து கடைசியில் நான் எழுதுகிறேன். இந்த குறிப்பிட்ட வசனத்தை வைத்துதான் இவர்கள் விசுவாசிகளை குழப்புகிறார்கள். அதனால்தான் இந்த கட்டுரைக்கு **அந்நியபாஷை குழப்பம்** என்ற தலைப்பை கொடுத்தேன்.

# AOG சபை முன்னாள் பிஷப் அவர்களின் கடிதம்:

**(AOG) -அசம்பளிஸ் ஆப் காட் சபையின் முன்னாள் பிஷப் அவர்களும், AOG சபையின் சிறந்த கன்வென்ஷன் பேச்சாளரும், என் நண்பருமான, மதுரை பாஸ்டர்.P.S.ராஜமணி அவர்கள் எனக்கு எழுதிய கடிதம்.**



**பாஸ்டர்.P.S.ராஜமணி அவர்கள் எழுதின கடிதத்தில் உள்ள முக்கிய சந்தேகங்களுக்கு பதிலை தனியாக எழுதாமல் கேள்வி-பதில் பகுதியைப்போல அவர் கருத்துக்கு என் சரியான பதிலை அப்படியே உடனுக்குடன் எழுதுகிறன். அப்போதுதான் வாசிக்கிற வர்களுக்கு குழப்பம் இல்லாமல் விளங்கும். அவரின் கடிதம் அடுத்த பக்கத்தில் காணலாம்.**

# "குழப்பம் அந்நியபாஷையில் இல்லை"

பாஸ்டர். ராஜமணி
100. நாவலர் நகர்,
மதுரை-625 016

' **பாஸ்டர்.ராஜமணி**

சகோதரர் புஷ்பராஜ் அவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் ஜாமக்காரனில் எழுதியிருந்த **அந்நிய பாஷை குழுப்பம்** என்ற செய்தியை வாசித்தேன். உங்கள் கருத்தை எழுத உங்களுக்கு உரிமை இருக்கிறது. எனவே அதற்கு பதில் எழுத முயற்சிக்கவில்லை. பின்பு நீங்கள் தனிப்பட்ட முறையில் அந்நியபாஷையைப்பற்றி எனக்கு எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். உங்கள் விருப்பப்படி இதை எழுதுகிறேன். **அந்நிய பாஷை குழப்பம்** என்று நீங்கள் எழுதியிருந்ததை பலமுறை வாசித்தேன். அதன்பின்தான் நான் பரிசுத்த ஆவியின் **அபிஷேகம், அந்நிய பாஷை** ஆகியவற்றைக் குறித்து ஒரு சிறு புத்தகம் எழுத ஆரம்பித்துவிட்டேன். அதில் இது சம்பந்தமாக எழுப்பப்படும் பல கேள்விகளுக்கும் பதில் எழுதுவேன்.

**பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நம்புகிறீர்கள். அந்நிய பாஷையில்** உங்களுக்கும் அநேகருக்கும் சந்தேகங்கள் பல இருக்கின்றன. பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெற்று **அந்நிய பாஷை** பேசும் பலரிடமுள்ள **போலியான அனுபவங்கள்** எனக்கும் தெரியாததல்ல!. நீங்கள் **எழுதியுள்ளவைகளில் பெரும்பான்மை யானவை** நடைமுறைப்பிரச்சனைகளைப் பற்றியது. அநேக காரியங்களை வசன ஆதாரமற்ற முறையில் கற்பனையில் எழுதியுள்ளீர்கள். நீங்கள் வாசித்த பல புத்தகங்களை நானும் வாசித்துள்ளேன். இன்னும் பல புத்தகங்களையும் வாசித்துள்ளேன். பல நூற்றாண்டுகளாகவே அந்நிய பாஷையைக் குறித்த தர்க்கங்கள் சபையில் இருந்து வருகின்றன.

**= ஜாமக்காரன்:** பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் தன் கடிதத்தின் தலைப்பிலேயே **குழப்பம் அந்நியபாஷையில் இல்லை** என்று ஆரம்பிக்கிறார்.

அதே சமயம் பெந்தேகோஸ்தே சபைகளில் **அந்நியபாஷை** பேசும் பலரிடம் உள்ள **போலியான அனுபவங்கள்** எனக்கும் தெரியாததல்ல என்று அவரே ஒத்துக்கொள்கிறார். அதனால்தான் குழப்பம் இவர்கள் உளரும் அந்நியபாஷை என்ற பெயரில் உள்ளது என்கிறேன். பெந்தேகோஸ்தே சபையினர் போலியாக **உளருவதைக்குறித்தும்** பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் பேசுவதையும் **உளரல்** என்கிறேன். அப்படியிருக்க குழப்பம் இவர்கள் **அந்நியபாஷை** என்ற பெயரில் பேசும் **உளரலிருந்து** ஆரம்பிக்கிறது என்று நான் குறிப்பிடுவது சரிதானே!.

‘ **பாஸ்டர்.ராஜமணி:** 1. பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்கு **அந்நிய பாஷை அடையாளமல்ல** என்று டாக்டர்.புஷ்பராஜாகிய நீங்கள் வன்மையாய் கண்டித்து எழுதியுள்ளீர்கள். நீங்கள் கூறும் கருத்திற்கு **வசன ஆதாரமில்லை.** எனவே இது உங்கள் கருத்தாய் இருக்கலாம். ஆனால் அது வசன ஆதாரமற்ற கருத்து.

= **ஜாமக்காரன்:** பரிசுத்தாவியானவரின் நிறைவுக்கு **அந்நியபாஷை அடையாளம் அல்ல** என்று நான் எழுதிய கருத்துக்கு **வேத வசன ஆதாரம் இல்லை** என்கிறார் பாஸ்டர்.ராஜமணி அவர்கள். அது என் சொந்த கருத்து என்றும் எழுதியுள்ளார்.

அந்நியபாஷை ஆவியானவருக்கு **அடையாளம்** என்று வேதத்தின் எந்த **புத்தகத்திலாவது எழுதப்பட்டுள்ளதா?** என்று ஆதாரத்துடன் கேட்கிறேன். பாஸ்டர்.ராஜமணி மட்டுமல்ல, வேறு எந்த பெந்தேகோஸ்தே சபை பாஸ்டராக இருந்தாலும் அந்நியபாஷை பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு **அடையாளம்** என்று எழுதப்பட்ட ஒரு வசனத்தை இவர்களால் வேதத்தில் காட்டமுடியுமா?

முழு வேதத்திலும் **அந்நியபாஷை** பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் **வரம்**(GIFT) (பரிசு)என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அதாவது அந்நியபாஷை **புதிய ஏற்பாட்டு** சபைக்கு வேத புத்தகம் எழுதப்படாத காலத்தில் இருந்த சபைக்கு **வரமாக** அருளப்பட்டது. **அடையாளமாக** அருளப்படவில்லை.

அதனால்தான் **ஆவியானவரை வாரும்என்றோ! அந்நியபாஷைவேண்டும் என்றோ! கூப்பிடக்கூடாது!, கேட்கவும் கூடாது!. GIFT-பரிசு கொடுக்கப்பட வேண்டியது அது கேட்கப்படக்கூடாது.**

இன்றைய எல்லா பெந்தேகோஸ்தே சபைகளிலும் ஆவியானவரே **இப்ப வாரும் !, இறங்கி வாரும்!** என்று அழைத்து கதறுகதறு என்று கதறி,சத்தம்போட்டு,கூச்சலிட்டு **கைகளை வேகமாக தட்டி**, உடல்களை குலுக்கி இந்துக்களின் மாரியம்மன் பண்டிகையில் உடல்களை துடிக்க விடுவதைபோல சபை விசுவாசிகள் அத்தனை கஷ்டப்படுகிறார்கள்.

பாஸ்டர்மார் ஆவியானவர் வேண்டும் என்பதற்காக தாங்களும் **கதறி** சபை மக்களையும் **கதற** விடுகிறார்கள். அவைகளை நேரில் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

ஆவியானவரை பெற்றுக்கொள்ள இவர்கள் படும் அவதி அவர்கள் முகங்களை சுழிப்பதை அந்த சமயத்தில் பார்த்தால் ஏதோ **வயிற்று வலியால்** தாங்கமுடியாமல் முகம் சுளிப்பதைப்போல் மிக பரிதாபமாக இருக்கிறது.

‘ மேலும் அனைத்து பெந்தேகோஸ்தே பாஸ்டர்களையும், பாஸ்டர்.ராஜாமணி அவர்களையும் கேட்கிறேன். **யார் ஆவியானவரை வாரும், இறங்கும் என்று கூப்பிடுவார்கள்?**

**யாருக்கு ஆவியானவர் இல்லையோ? அவர்கள் தானே ஆவியானவரே வாரும்** என்று கூப்பிடவேண்டும். அப்படியானால் ஆராதனை நடத்தும் பாஸ்டருக்கு அதுவரை **ஆவியானவர் அனுபவம் இல்லையா?** அல்லது அந்த அத்தனை சபை மக்களுக்கும் அதுவரை ஆவியானவரின் அனுபவம் இல்லை என்றுதானே அர்த்தம்!.

**ஆவியானவரே! இறங்கும்! இறங்கும்! ஆவியானவரே! நிரப்பும்!நிரப்பும்! அக்கினி! அக்கினி** என்று சத்தம்போட்டு எத்தனையாய் பாடுபடுகிறார்கள். இப்படி உறக்க,சத்தம் போட்டால்தான் ஆவியானவர் இறங்கி நடந்துவருவாரா? ஆவியானவரின் நிறைவுக்கு இவர்கள் படும்பாடு மிகப்பரிதாபம். பிரசவ ஸ்தீரி படும்பாடுகளைபோல் பரிதாபமாக இருக்கிறது.

புறஜாதி மக்கள் இவர்கள் கஷ்டப்படுவதைப்பார்த்து **பைத்தியக்காரர்கள்** என்று அழைப்பார்கள் என்று பவுல் தெளிவாக எச்சரிக்கிறார். என்ன ஒரு ஒழுங்கீனம் இது? இதுவா ஆவியானவரின் ஆராதனை?.

‘ இன்னும் ஒரு கூத்து நடப்பதை கவனியுங்கள். சபை ஆராதனை தொடங்கி இப்படி மக்களை சத்தம்போட வைத்துவிட்டு பாஸ்டராகிய தானும் வேண்டிய அளவு கதறிவிட்டு பிறகு பாஸ்டர் கூறுகிறார். இப்போது சபை மக்கள் எல்லாரும் ஆவியானவரை வரவேற்கும் விதத்தில் **கைகளை பலமாக தட்டி வரவேற்போம் என்கிறார். யாரோ மந்திரியோ,** அதிகாரியோ உள்ளே நுழைந்ததுபோல் படபடபடவென்று கரஒலி சத்தம் காது பிளக்கும் சபை மக்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் குதித்து கைகளை உயர்த்தி அமர்களப்படுத்தி விடுகிறார்கள். இது **ஏமாற்று ஆராதனையாக** யாருக்கும் தோன்றவில்லையா? ஆராதனைக்கு முன்புவரை **ஆவியானவர்** எங்கே போயிருந்தார்? **படித்தவர்களும்** இந்த பொய்யான ஆராதனைக்கு அடிமையாகி கிடக்கிறார்களே என்பது எத்தனை அவமானம். ஜாக்கிறதை? **தேவன் தம்மை பரியாசம் பண்ண ஒட்டார்**. கலா 6:7.

**‘ பாஸ்டர்.ராஜமணி : 2. பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்கு உடனடி அடையாளம் அந்நிய பாஷைகள்தான் என்று நம்புகிறவர்கள் கூறும் ஆதாரமென்ன?.**

**= ஜாமக்காரன்:** பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்துக்கு அடையாளம் **அந்நியபாஷைதான்** என்று நம்புகிறவர்கள் கூறும் ஆதாரமென்ன? என்று இவர் எழுதியதில் **அந்நியபாஷைதான்** அடையாளம் என்று நம்புகிறவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து பரிசுத்தஆவியானவர் நிறைவுக்கு **அந்நியபாஷை அடையாளம்** என்பதை பாஸ்டர்.ராஜமணி அவர்கள்கூட நம்பவில்லை என்று விளங்குகிறது. நான் நேரில் மதுரைக்கு பாஸ்டர்.ராஜமணி அவர்கள் வீட்டிற்கு சென்று சுமார் முக்கால் மணி நேரம் பேசினேன். மேலும் இவர் பேசின இரண்டு பொது கூட்டங்களிலும், சபையின் காலை ஆராதனையிலும் வெவ்வேறு ஊர்களில் கலந்துக்கொண்டேன். அதே சமயம் மேடையில் உள்ள பாஸ்டர்கள், சபை மக்கள் யாவரும் **அந்நியபாஷை** என்ற பெயரில் உளறினார்கள். ஆனால் இவரோ பாஷை ஏதும் பேசவில்லை.

அந்த குறிப்பிட்ட நேரம் ஜெபம் என்பதை நான் நம்பாதபடியால் நான் கண்களை திறந்து பார்த்தப்படி இருந்தேன். அதனால்தான் அவர் உளரவில்லை என்பதை தெளிவாக அறிந்தேன். மேலும் **பாஸ்டர்.ராஜமணி** அவர்கள் வசனத்தில் தெளிவுள்ளவர். அவருக்கே தெரியும் சபையில் பேசுபவர்களின் **உளரல் பாஷை அல்ல** என்பது. என்றாலும் தான் சார்ந்த AOG சபையின் அடிப்படை உபதேசம் என்னவென்றால் **அந்நியபாஷை** பேசினால்தான்

**பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு அடையாளம்** என்பதாகும். ஆகவே தான்சார்ந்த சபை உபதேசத்தின் வழியில் அவர் போய் கொண்டிருக்கிறார்.

**' பாஸ்டர்.ராஜமணி : எருசசேலம். அப் 2:4**

பெந்தேகோஸ்தே என்னும் நாளில் அப்போஸ்தலரும் இயேசுவின் தாயாகிய மரியாளும் மற்றும் சீடர்களும் **பரிசுத்த ஆவியை** பெற்றபோது ஆவியானவர் அவர்களுக்கு கொடுத்த **வரத்தின்படியே** வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள்.

**= ஜாமக்காரன்:** பரிசுத்தாவியானவரின் நிறைவுக்கு **அந்நியபாஷை உடனடி அடையாளம்** என்பதற்கு கீழே காணும் வசனங்களை பாஸ்டர்.ராஜமணி அவர்கள் குறிப்பிடுகிறார். அப் 2:4, அப் 10:45,அப் 19:1-6.

எருசலேம் அப் 2:4 அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின **வரத்தின்படியே** வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் என்றுதான் எழுதியிருக்கிறது. **வரம் GIFT** என்று எழுதியிருப்பதை கவனிக்கவும். **அடையாளம்** என்று எழுதப்படவில்லை என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**முதலாவதாக அப் 2:4ல் எருசலேமில் நடந்த சம்பவத்தை கவனிப்போம்: இப்போது வாசிக்கபோகும் என் பதில் மிகமிக முக்கியமானதாகும்.**

பாஸ்டர்.ராஜமணி அவர்கள் அந்நியபாஷைதான் ஆவியானவர் நிறைவுக்கு உடனடி அடையாளம் என்பதற்கு ஏராளமான புத்தகங்களை தான் வாசித்ததாக கூறுகிறார்.

பலர் எனக்கே அந்நியபாஷைபற்றி அது சம்பந்தமான ஏராளமான புத்தகங்களை வாசிக்கும்படி அனுப்பியிருக்கிறார்கள்.

சிலர் சில வேத பண்டிதர்களின் வியாக்கியானங்களையும் (Comentry) இமெயில் மூலம் அனுப்பியுள்ளார்கள். அப்படி அவர்கள் அனுப்பிய புத்தகங்கள் ஒன்றையும் நான் வாசிக்கவில்லை. வாசிக்க எனக்கு நேரமும் இல்லை. வாசிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. என்றாலும் ஒரு சில புத்தகங்களை மேற்போக்காக நானும் வாசித்திருக்கிறேன்.

**' வேத புத்தகத்தில் என்ன சந்தேகம் கண்டாலும் அதற்கான பதிலை வேதத்திலேயே தேடு?** என்று ஒரு உண்மை ஊழியன் எழுதியிருக்கிறார்.

ஆவியானவர் எழுதிய வேதத்தைக்குறித்த சந்தேகங்களுக்கான விளக்கம் அதை எழுத வைத்த ஆவியானவரேத்தான் **அதை நமக்கு விளங்க வைக்கவேண்டும்.**

அந்த அடிப்படையில் **அந்நியபாஷையை** அடையாளமாக கொடுக்காத எனக்குள் இருக்கும் **ஆவியானவர்**, என்னை உணர்த்தியபடி இதற்கு பதில் எழுதுகிறேன்.

' 1. **எருசலேம்** (அப் 2:4ல்) **உலகிலேயே பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கம்** இங்குதான் நடந்தது.

**பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிதாவின் சித்தத்தை** நிறைவேற்ற **ஆவியானவர்** பலர் மேல் **இறங்கி பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியப்பின் திரும்ப போய்விட்ட**

அனுபவத்தை தான் நாம் பழைய ஏற்பாட்டில் வாசித்திருக்கிறோம்.

ஆனால் **ஆவியானவர்** என்றன்றைக்கும் மனிதனுக்குள் நிரந்தரமாக தங்கி வழி நடத்தும் திட்டத்தோடு ஆவியானவர் எருசலேமில் மேல்வீட்டு அனுபவத்தின்மூலம் **முதல் இறக்கத்தை** அந்த இடத்தில் நிறைவேற்றியபோது இறங்கிய ஆவினாயவர் திரும்பபோகாமல் **மனந்திரும்பி இரட்சிக்கப்படும்** நபர்களுக்குள் பிரவேசித்து என்றென்றும் வழி நடத்தினார். யோ 14:16,எபே 1:13,யோ 14:23,24 வசனங்களில் வாசித்து அறியுங்கள்.

யோ 14:16 வசனம்மூலம் யோவேல் 2:28,29ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசன வசனத்தின்மூலம் கர்த்தர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி தான்கூறியதை நிறைவேற்ற சித்தமுள்ளவரானார்.

‘ இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்து பரமேறி சென்றபின் இயேசுகிறிஸ்து கட்டளையிட்டபடி பரிசுத்த ஆவியானவரின் வரவுக்காக எருசலேமில் ஒரு வீட்டில் இயேசுவின் சீடர்களுடன், அப்போஸ்தலர்களும் அமர்ந்திருந்தார்கள்.

## பாஷைகள் உருவாக்கப்பட்ட சரித்திரம்:

**அந்நியபாஷைகளைப்பற்றி** அறியும்முன் இதன் ஆரம்ப சரித்திரத்தை வாசகர்கள் அறியவேண்டியது அவசியம். அப்போதுதான் பெந்தேகோஸ்தே சபையினர் பேசும் போலியான அனுபவ விவரங்களை விளங்கிக்கொள்ளமுடியும்.

**உலகமெங்கும் ஒரே பாஷையும்**

**ஒரேவிதமான பேச்சும் இருந்தது. ஆதி 11:1**

மேலே வாசித்தப்படி **நோவா காலத்தில்** உலகம் முழுவதும் ஏற்பட்ட வெள்ள அழிவுக்கு பிறகு அழிவில் காப்பாற்றப்பட்ட **நோவா குடும்பம்** பலுகி பெருகி பெருத்த கூட்டமாக வாழ்ந்தார்கள். நடந்த **வெள்ள அழிவுக்கு காரணம்** தங்கள் மூதாதையர் செய்த **பாவம்,** கர்த்தருக்கு **கீழ்ப்படியாமை** ஆகியவற்றால்தான் ஏற்பட்டது என்பதை இந்த மக்களும் மறந்து மறுபடியும் மக்கள் கர்த்தரின் மனம்வேதனைப்படும் அளவு கர்த்தருக்கு **கீழ்படியாமல்** தங்கள் மனம்போனப்படி நடந்தார்கள். அப்படிப்பட்ட காலகட்டத்தில் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தேவனுக்கு **பெருமை** சேர்க்காத செயலை செய்தார்கள். அவர்கள் **தங்களுக்கு பேரும்,பெருமையும்** உண்டாகத்தக்க தாக ஒரு நகரத்தை உண்டாக்கி அதில் **வானத்தை தொடும்அளவு மிக** உயரமான **கோபுரத்தையும்** பணிய தொடங்கினார்கள். இந்த முட்டாள்தனமான இவர்கள் முயற்சியை அறிய கர்த்தர் பூமிக்கு இறங்கிவந்து அவர்கள் கட்டும் கோபுரத்தையும் கண்டார். தாங்கள் கட்ட நினைத்ததை **யாராலும் தடுக்கமுடியாது** என்றும் அவர்கள் கூறிக்கொண்டார்கள்.

## தேவ கோபம் வந்தது:

உடனே கர்த்தர் அவர்கள் **பேசின பாஷையை** தாறுமாறாக்கினார். ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதுபோனாது. பின்னும் கர்த்தர் அவர்களை அந்த குறிப்பிட்ட இடத்திலிருந்து பூமியெங்கும் **சிதறிப்போகப்பண்ணினார்.** யார் யார் எந்தெந்த பாஷை பேசினார்களோ அவர்கள் எல்லோரும் கூடிபேசி உலகின் பல இடங்களில் சென்று குடியேறினார்கள்.

காலங்கள் கடந்துப்போனது. சரித்திரம் மாறினது. ஆபிரகாம் காலம், யோசேப்பின் காலம் இப்படி காலங்கள் கடந்துப்போக யெகோவாவை நேசித்த ஜனங்களை மட்டும் கர்த்தர் நேசித்தார். ஆனால் அவர்கள் **பாவம்** செய்தபோது அவர்களை திருத்துவதற்காக சத்துருக்களிடம் கர்த்தரே தன் ஜனத்தை ஒப்படைத்தார். அப்படியாகத்தான் **பார்வோனிடம்** அடிமைகளாக இஸ்ரவேல் மக்கள் பல காலம் வாழ்ந்தார்கள்.சில வருடங்களில் மக்கள் மனந்திரும்பினார்கள். உண்மை தெய்வத்தை தேடினார்கள். தங்களை விடுவிக்க அவரிடம் கெஞ்ஜினார்கள். கர்த்தரும் மனம்இறங்கி **மோசே** மூலமாக தன்னை நேசித்த மக்களை கர்த்தர் எகிப்திலிருந்து விடுவித்தார்.

**எகிப்தியர்** கையிலிருந்து அவர்களை **40 வருடங்கள் வழிநடத்தி கானான்** தேசத்துக்கு கொண்டுவந்து சேர்த்தார்.

## நியாதிபதிகள் காலம்:

கர்த்தர் தன் மக்களை நியாதிபதிகளை கொண்டு நியாயம் தீர்த்து வழிநடத்தினார்.

## இராஜாக்களின் காலம்:

இப்போது ஜனங்கள் நியாதிபதிகள் வேண்டாம் என்றும், தங்களை ஆள எங்களுக்கு ராஜா வேண்டும் என்றார்கள். அப்படியே சவுல் முதல் பல ராஜாக்களை கொண்டு கர்த்தர் தம் மக்களை வழி நடத்தினார். ஆனால் ராஜாக்களும் கர்த்தரை விட்டுவிலகினார்கள்.

## தீர்க்கதரிசிகளின் காலம்:

**இராஜாக்களும்** மக்களோடு சேர்ந்து **விக்கிரங்களை** வணங்குவதும் பாவம் செய்வதுமாக வாழ்ந்து தேவனை தொடர்ந்து வேதனைப்படுத்தினார்கள். அதனால் பல தீர்க்கதரிசிகளை கர்த்தர் எழுப்பி தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தர் தன் மக்களையும், ராஜாக்களையும் எச்சரித்துவந்தார்.

ஆனாலும் மக்கள் **தேவனைவிட்டு** விலகுவதும்,**கீழ்ப்படியாமல்** போவதும் தொடர்ந்தது. இந்த சூழ்நிலையில்தான் கர்த்தர் மிகவும் மனம் வெறுத்து உலகத்தையும், உலகத்தில் வாழும் மக்களையும் முற்றுமாய் அழிக்கதிட்டமிட்டார். நோவா காலத்தில் முழு உலகத்தையும் தண்ணீரால் அழித்ததுபோல இந்த முறை **அக்கினியினால்** உலகம் முழுவதையும் அழிக்க திட்டமிட்டார். இது உலகத்துக்கு **இரண்டாம் அழிவு** என்றாலும், இதுவே கடைசி அழிவாகவும் இருக்கும் என்றார். இதற்கு மேலும் மக்கள் பூமியில் வாழ சந்தர்ப்பம் கொடுக்கமாட்டார். அப்படியே பிசாசை முழுவதுமாக அழிக்கவும் திட்டமிட்டார் மேலும் இரக்கம் உள்ள தேவன் தான் ஆசையாய் உண்டாக்கிய மனிதர்களை முற்றிலும் அழிக்காதபடி, தான் உண்டாக்கிய **மனிதர்களை** தன் பரலோகத்தில் தன்னோடு வைத்துக்கொள்ள மனஉருக்கமுள்ளவரானர். அப்படி மானுட வர்க்கம் பரலோகம் செல்லவேண்டுமானால் அவர்கள் பாவம் மன்னிக்கப்படவேண்டும். ஆகவே இந்த மக்களின் பாவம் மன்னிக்கப்பட்டு அவர்களை பரிசுத்தமாக்கி பரலோகத்தில் சேர்த்துக்கொள்ள பிதாவால் வகுத்த திட்டம்தான் **பரிசுத்த இரத்தம்** பூமியில் சிந்துதல் மூலம் மனிதர்களின் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்ற திட்டமாகும். **இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பு இல்லை.**

எபி 9:22. இந்த திட்டத்தின்படி மக்களின் **பாவங்கள் மன்னிக்கப்பட** மனிதர்களுக்கு கடைசி சந்தர்ப்பமாக **மேசியாவை** உலகத்துக்கு அனுப்பி அவரை **பலிகடாவாக்கி** அவரை **கொல்ல வைத்து** கொல்லப்படும்போது அவர் சிந்தும் **இரத்தம்மூலம்** மக்களின் பாவவிமோசனத்துக்கு வழிவகுத்தார். அந்த திட்டத்தின்படி **ஏசாயா தீர்க்கதரிசி** மூலமாக **மேசியா** பூமியில் பிறப்பதைக்குறித்து தன் மக்களுக்கு ஏசா 7:14. எச்சரிப்பின் அறிவிப்பை கொடுத்தார். பிதா அனுப்பும் **மேசியாவை** ஏற்றுக்கொண்டு அவர் **சிந்திய இரத்தத்தை** யார் ஒருவன் தன் பாவம் கழுவப்பட அது ஒன்றுதான் வழி என்று யார் நம்புகிறார்களோ அவர்கள் யாராக இருந்தாலும் எந்த இனத்தவராக இருந்தாலும் அவர்களுக்கு **பாவமன்னிப்பு** கிடைக்கும் என்றார். அந்த **மேசியா யார்** என்பதை நாங்கள் எப்படி அறிவோம் என்ற கேள்விக்குத்தான் ஏசா 7:14ல் கன்னிகை **கர்ப்பவதி** ஆவாள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். **கன்னிகை கர்ப்பவதியாவது** கூடாத காரியம். உலகத்தில் நடந்திராத அதிசயமும் ஆகும். கணவன் இல்லாமல் ஆண் தொடர்பு இல்லாமல் கன்னி **மரியாள்** தேவ திட்டப்படி கர்ப்பம் தரித்து மேசியாவாகிய **இயேசுகிறிஸ்துவை** பெற்றெடுத்தாள்.

இந்த சந்தோஷ செய்தியை கர்த்தர் நேசிக்கும் (யூதர்களுக்கு) இஸ்ரவேல் மக்களுக்கு முதலாவது அறிவிக்கப்பட்டது. **யூதர்களிலேயே பலர் விக்கிரகத்தின்** பின்னே போனாலும் பெரும்பாலான யூதர்கள் ஒரே தெய்வமாகிய **யெகோவாவை(யாவே)** ஆராதிப்பதில் வைராக்கியமாக இருந்தனர். ஆகவே முதல் இரட்சிப்பு யூதரிலிருந்து தொடங்கும் என்றார்.

ஆனால் இந்த **யூதர்கள் இயேசுதான் மேசியா** என்பதை நம்ப மறுத்தார்கள். தான் தான் **மேசியா** என்று **மோசே** எழுதிய நியாயபிரமாண புத்தகமும், **தீர்க்கதரிசிகள் எழுதியதில்** தன்னைப்பற்றி குறிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி இயேசு பிரசங்கித்தார். என்றாலும் அவர் பேசுவதை **தேவ தூஷணம்** என்று கூறி **இயேசுவை பிடித்து சிலுவையில்** அறைந்தார்கள். மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியதை யூதர்கள் நம்பாமல்போனாலும், தான் செய்த அற்புத கிரியைகளை கண்டாவது தான்தான் **மேசியா** என்று நம்பவைக்க **இயேசுகிறிஸ்து** எவ்வளவே முயன்றார். என்றாலும் முரட்டாட்டம் உள்ள அந்த மக்கள் மேசியாக வந்த **இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றார்கள்**. அவர் மரித்து **மூன்றாம் நாள்** உயிரோடு எழுந்தார். தான் உயிரோடு இருப்பதை பல திருஷ்டாந்தங்கள் மூலமாக எல்லாருக்கும் வெளிப்படுத்தினார். அப் 1:3.

## பற்பல பாஷைகள்:

இந்த அற்புதமான பிதாவின் ஏற்பாடுகள் யாவும் முடிந்தபின் பிதா அனுப்பிய **மேசியா** இயேசுதான் என்பதை அறிவிக்கவும் **பரிசுத்த ஆவியானவரை(பிதா)** தான் வாக்கு செய்தபடி உலகத்திற்குள் **மாம்சமான யாவர்மேலும்** இறக்கவும் செய்த அந்த திட்டத்தின்படி ஆவியானவரின் **முதல் இறக்கமாக எருசலேமில் உள்ள ஒரு வீட்டில் மேல்அறையில்** காத்திருந்த **தன் சீஷர்களும்,அப்போஸ்தலர்களும்** ஆவியானவரின் நிறைவை அனுபவிக்க எருசலேமில் மேல் அறையில் **காத்திருக்க** கட்டளையிட்டார். அப்படியே யாவரும்

**காத்திருந்தார்கள்.** அந்த ஒரு இடத்தைத்தவிர வேறு எந்த இடத்திலும் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக நிறைவுக்காக **காத்திருக்கும்படி** ஆண்டவர் எங்கும் சொன்னதில்லை. அப்படி செய்ததும் இல்லை. ஆனால் சீஷர்களுக்காக பரிசுத்தாவியின் இறக்கத்துக்காக **எருசலேமில்** காத்திருக்க சொன்ன தெய்வம் வேறு எந்த இடத்திலும், **புதிய ஏற்பாட்டு சபைகளில்** எங்கும் எந்த ஊரிலும் காத்திருக்க கூறியதில்லை. TPM **பாஸ்டர்.ராஜன்** அவர்களின் கடிதத்தில் எழுதியதைப்போல காத்திருந்துதான் ஆவியானவரை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற உபதேசம் வேதத்தில் இல்லாத பிழையான உபதேசம் ஆகும். அது கள்ள உபதேசமாகும். வேதத்தில் வேறு எங்கும் சீஷர்களோ, சபையோ,**ஆவியானவருக்காக காத்திருந்ததாக** வேதம் நமக்கு போதிக்கவில்லை.

## சிதறடிக்கப்பட்டவர்களுக்கு சுவிசேஷம்:

**எருசலேமில்** அப் 2:4ல் சம்பவித்ததின் விவரம்: ஆதியாகமம் 11ம் அதிகாரத்தில் நாம் வாசித்த சம்பவத்தில் **கோபுரம்** பணிந்ததினால் தேவகோபம் ஏற்பட்டு பல பாஷைகளை ஏற்படுத்தி அதன் காரணமாக உலகம் முழுவதும் பல்வேறு பாகங்களில் யூதர்கள் சிதறிடிக்கப்பட்டார்கள். அந்த யூதமக்கள் ஒவ்வொரு வருடமும் **பஸ்கா** பண்டிகைக்கு எருசலேமுக்கு வந்து தங்கி எருசலேம் தேவாலயத்தில் ஜெபித்துபோவது வழக்கமாக கொண்டிருந்தனர். அப்படி சிதறடிக்கப்பட்ட அந்த யூதர்களுக்கு **மேசியா** என்பவர் இயேசுகிறிஸ்துதான் என்பதை அறிவிக்க பிதா ஏற்பாடு செய்த **தேவ திட்டம்** தான் இங்கு எருசலேமில் நிறைவேற்றப்பட்டது ஆகும்.

இவர்கள் யாவரும் **மேசியா வருவார்** என்பதை தீர்க்கதரிசன ஆகமங்கள்மூலமாக அறிந்திருந்தார்கள், ஆனால் அது **இயேசுதான்** என்பதும், **இயேசுவின் இரத்தத்தை நம்பி பாவ அறிக்கை செய்தால் பாவமன்னிப்பு** இந்த உலகத்தில் மனிதன் உயிரோடு இருக்கும்போதே **பாவமன்னிப்பு கிடைத்துவிடும்** என்ற சந்தோஷ செய்தி இங்குதான் அரங்கேறினது. பஸ்கா பண்டிகையின் 50வது நாளில் அந்த அற்புத சரித்திர சம்பவம் அரங்கேறப்போகிறது என்பதை அந்த இராத்திரி யாரும் அறியாமல் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் **ஆவியானவர் முதலாவது சீஷர்கள்**மேலும், **அப்போஸ்தலர்கள்மேலும்** இறங்கி அவர்கள் வாய்வழியாக **இயேசுகிறிஸ்துதான் பிதா அனுப்பிய மேசியா** என்று அறிமுகப்படுத்தும் அற்புத சம்பவம் நடந்தது. அன்று இயற்கைக்கு அப்பாற்பட்ட மூன்று சம்பவங்கள் நடந்தது.

## பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கத்துக்காக எருசலேமில் உள்ள மேல் வீட்டில் சீஷர்கள் காத்திருந்தார்கள் அப்போது 3 சம்பவங்கள் நடந்தேறியது.

**முதலாவது:** பலத்த காற்று வந்தது. வீடுமுழுவதையும் அது நிரப்பிற்று. **காற்று** பரிசுத்த **ஆவியானவருக்கு** அடையாளமாக பழைய ஏற்பாடுகளில் எழுதப்பட்டதை அறிவீர்கள். பரிசுத்த ஆவியானவரின் வரவுக்காக காத்திருந்த சீஷர்கள் பலத்த சத்தத்துடன் காற்று வீசி வீட்டை நிரப்பியபோது **ஆவியானவர்** வந்துவிட்டார் என்று அறிந்துக்கொண்டார்கள்.

ஆவியானவரை என்றென்றுமாய் நம்மோடு கூட இருக்கும்படி வாக்கு அருளிய **இயேசுகிறிஸ்து அந்த வாக்கை** இங்கு நிறைவேற்றினார். அதன்படி **ஆவியானவர்** முதல் இறக்கம் இங்கு சம்பவித்தது.

**சடுதியாய் உண்டான முழக்க சத்தம்:**

இந்த சத்தம் உண்டாக காரணம்: பஸ்கா பண்டிகைக்காக எருசலேம் வந்து தங்கியிருந்தவர்களுடன் உலகின் பல்வேறு இடங்களில் சிதறடிக்கப்பட்ட தேவ பக்தியுள்ள **யூதர்களையும் மேல்அறை வீட்டுக்கு** முன்பாக கூட்டி சேர்க்க பிதாவினால் ஏற்படுத்தப்பட்ட சத்தமாகும்.

அந்த சத்தத்தை கேட்டவர்கள் யாவரும் உறக்கத்திலிருந்து எழுந்து சத்தம் எந்த வீட்டிலிருந்து உண்டானதோ? அந்த வீட்டுக்கு முன்பாக **யூதர்களோடு,** திரளான ஜனங்களும் கூடி நின்றார்கள்.

இப்போது அறையிலிருந்த சீஷர்கள் வெளியே வந்து நிற்கிறார்கள். அப்போதுதான் **பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல்** இறங்கினார் என்று வாசிக்கிறோம்.

## அக்கினிமயமான நாவுகள்(தீ ஜீவாலை)FLAM:

இப்போது (**அக்கினிமயமான நாவுகள்**) **நெருப்பு ஜீவாலை** ஒவ்வொரு சீஷர்கள்மேலும் அமர்ந்தது. அந்த சம்பவம் விவரிக்க முடியாத அற்புத சம்பவம் ஆகும். ஒரு மனிதனின் சரீரம் முழுவதும் நெருப்பு ஜீவாலை சூழ்ந்திருக்க கண்டால் எப்படியிருக்கும்? கற்பனை செய்து பாருங்கள். அந்த **நெருப்பு ஜீவாலை** சீஷர்களை சுட்டெரிக்கவில்லை. அப்படியாகியிருந்தால் கரிகட்டையாகியிருப்பார்கள். **நெருப்பு ஜீவாலை** சீஷர்களை மறைக்காமல் நெருப்பு ஜீவாலைக்குள் சீஷர்களின் உருவத்தை மக்கள் பார்க்கிறார்கள். எத்தனை ஆச்சரியமான காட்சியிது.

இத்தகைய காட்சிக்கும் விசேஷ காரணமுண்டு. கூடி நின்றவர்களுக்கு குறிப்பாக தேவ பக்தியுள்ள யூதர்களுக்கும் கர்த்தர் பழைய சம்பவத்தை ஞாபகப்படுத்தி மேல் வீட்டனரயின் முன் நிற்கும் சீஷர்கள் நம் தேவனை ஆராதிக்கிறவர்களும், நம் **தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்** என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த நடந்த அற்புத சம்பவமாகும். **யூதர்கள்** மதிக்கிற முற்பிதாக்களின் தலைவனான **மோசேயுடன்** அன்று கர்த்தர் எரியும் **அக்கினி ஜீவாலையின்** நடுவே நின்று கொண்டுதான் பேசினார்.(யாத் 3:2-4). நெருப்பு எரிகிறது. அப்போது வசனம் கூறுகிறது. **மோசே உற்றுபார்த்தானாம்** நெருப்பில் எரிந்துக்கொண்டிருந்த அந்த **முட்செடி வெந்துபோகாமல்** அதாவது கரிகட்டைபோல் ஆகாமல் அப்படியே உயிருள்ள முட்செடியாகவே இருந்தது. நெருப்பு ஜீவாலை **முட்செடி முழுவதையும் எரித்துக்கொண்டிருந்த நிலையை மோசே** கண்டான். இது ஒரு ஆச்சரியமான விஷயம். தூதன் வேஷத்தில் வந்த கர்த்தரின் உடல் முழுவதும் நெருப்பு ஜீவாலையில் எரிந்துக்கொண்டிருக்கிறது. ஜீவாலையின் நடுவே தூதனையும் மோசே பார்க்கிறான். இப்போதுதான் **தேவ செய்தியனாது** நெருப்பு ஜீவாலையின் நடுவே நிற்கும் தூதன் வழியாக வருகிறது.

தீ ஜீவாலை வழியாக கர்த்தர் பேசின இந்த **அற்புத சம்பவம்** குறித்து தலைமுறை தலைமுறையாக தங்கள் சந்ததியுடன் கூறி தேவனை புகழ்வது யூதர்களின் வழக்கம் ஆகும். ஆகவே தங்கள் முற்பிதாக்கள் கூறிய அதே சம்பவத்தை போல இப்போது **மேல் அறை** வீட்டின் முன்பாக நிற்கும் சீஷர்கள்மேல் எரியும் நெருப்பு ஜீவாலையையும் மோசேயுடன் கர்த்தர் பேசின சம்பவத்தோடு ஒப்பிட்டு பார்க்கிறார்கள். அதே சம்பவம் அதே நெருப்பு ஜீவாலை, அன்று முள்செடி எரிந்து கருகவில்லை. அப்படியே இங்கு சீஷர்களும் ஜீவாலையில் எரிந்து கருகவில்லை.

இதன்மூலம் இயேசுவின் சீஷர்கள் யாவரும் கர்த்தரால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை இந்த ஜனங்கள் உறுதிப்படுத்த இது கர்த்தரால் நடத்தப்பட்ட ஏற்பாடாகும்.

**அந்நியபாஷையில் பேசவில்லை** அப் 8:18. இந்த குறிப்பிட்ட வசனங்களில் பேதுரு கைவைத்து ஜெபித்தபோது பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் யாரும் அந்நியபாஷையில் பேசவில்லை.

## பவுல் பேசிய அந்நியபாஷை:

1கொரி 14:18ல் உங்கள் எல்லாரிலும் நான் அதிகமாய் **பாஷைகளை பேசுகிறேன்** என்று பவுல் கூறினார்.

இதை பவுல் எந்த இடத்தில் கூறினார். **கொரிந்து சபையில்** கொரிந்து சபை மக்களுக்கு முன் பேசுகிறார்.

கொரிந்து சபையில் சுமார் 16 அந்நியபாஷை பேசுகிற பாஷைக்காரர்கள் ஆராதனையில் இருந்தார்கள். அவர்களிடம் பாஷை பிரச்சனைகள் உண்டானபோது 1 கொரி 14ம் அதிகாரம் முழுவதிலும் அந்த சபை மக்களுக்கு பாஷை பிரச்சனை உண்டானதை சரிப்படுத்த விளக்கம் கொடுக்கும் வகையில் பேசின வார்த்தைதான் 8,9,10 வசனங்களில் வாசிக்கிறோம்.

அந்த வரிசையில் கூறப்பட்ட வார்த்தைதான் அப் 8:18ல் நான் உங்களில் அதிகமாக பாஷைகளை பேசுகிறேன் என்றார். காரணம் **பேதுரு, யோவான்** போன்ற மற்ற சீஷர்கள் யாவரும் யூதர்களுக்கு மத்தியிலே மட்டும் அதிகம் ஊழியம் செய்தவர்கள்.

ஆனால் **பவுலோ** தன் தொழிலாகிய கூடாரபணி செய்துகொண்டே பல விதமான பாஷைகள் பேசும் **புறஜாதிகள்** மத்தியில் அதிகம்ஊழியம் செய்தவர் ஆகும். கூடாரபணி செய்து அந்தந்த ஊர் பாஷைகளை கற்றுக்கொண்டு **அந்த பாஷையில் சுவிசேஷம் அறிவித்து** ஊழியம் செய்ததால் **பவுல் மட்டுமே** பல பாஷைகளில் பேசுபவராக இருந்தார். ஆகவேதான் கொரிந்து சபைக்கு வந்த போது உங்களைவிட மற்ற சீஷர்களைவிட **மிக அதிகமான பாஷைகளில்** பேசுகிறேன் என்றார். அதை பரிசுத்த ஆவியின் நிறைவுக்கு அடையாளமாக பவுல் கூறவில்லை.

இயேசுகிறிஸ்து மற் 16:17 ல் கூறும்போது **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களானவன** அவர்கள் **நவமான பாஷைகளில் பேசுவார்கள்**. இது ஒரு **வரம்** GIFT ஆகும்.

## கேரளாவில் தோமா பேசிய மலையாளம்:

இயேசுவின் சீஷன் **தோமா** கேரள கடற்கரையில் **சிடங்கனுார்** என்ற ஊரில் வந்து இறங்கி அங்குள்ள இந்துக்கள் ஆலயத்தில் படுத்திருந்தபோது அதிகாலையில்(பிரமணர்கள் என்று தமிழ்நாட்டில் அழைக்கப்படும் உயர் ஜாதியினரைப்போல்) கேரளத்தில் நம்பூதிரிகள் என்று அழைக்கப்படும் உயர் ஜாதியினர் சூரிய நமஸ்காரம் செய்ய குளத்தில் இறங்கி தண்ணீரை அள்ளி சூரியன் உதிக்கும் திசைநோக்கி வீசி தொழுதுகொள்ளும்போது தோமா அறிவித்த சுவிசேஷத்தாலும் அவன் மூலமாய் நடப்பித்த அற்புதத்தாலும் அந்த உயர்குல நம்பூதிரிகளுக்குத்தான் கேரளத்தில் முதன்முதல் சுவிசேஷத்தை அறிவித்தார். தோமாவுக்கு மலையாளம் கற்க நேரம் இல்லையே. எப்படி மலையாளத்தில் சுவிசேஷம் அறிவித்தார். அதுதான் Gift of the Holy Spirit பரிசுத்த ஆவியானவரின் **வரம்.** அந்த **வரம்** கர்த்தரால் கொடுக்கப்படவேண்டியது. நாம் கேட்டுபெற்றுக்கொள்வது அல்ல!. அதனால்தான் **அந்நியபாஷை** வரம் வேண்டும்,**சுகமளிக்கும் வரம்** வேண்டும் **ஆவியானவர் வர வேண்டும்** என்றெல்லாம் கேட்கக்கூடாது!. அதற்காக ஜெபிக்கவும்கூடாது! என்கிறேன். ஏன் கேட்கக்கூடாது என்பதற்கு விளக்கம் முன்பகுதியில் எழுதியிருக்கிறேன்.

**வரம் கொடுக்கப்படவேண்டியது**

**வரம் கேட்கப்படகூடியது அல்ல.**

தோமாவுக்கு அந்த நாட்டுக்கு உடனே சுவிசேஷம் அறிவிக்க மலையாள **பாஷை வரம்** உடனே தேவைப்பட்டது. கர்த்தர் கொடுத்தார் தோமா பேசினார். அவ்வளவே?. அப் 2ம் அதிகாரத்தில் சீஷர்கள் தனக்கு தெரியாத **பல மொழிகளில்** ஒரே வாய் வழியாக பேசினார்களே எப்படி? அதுதான் ஆவியானவரால் அருளப்படும் **வரம்.** அந்த **பாஷை வரம்** அங்கு தேவைப்பட்டது. ஆவியானவர் கொடுத்தார். சீஷர்கள் பாஷைகளில் பேசினார்கள்.

‘ பாஸ்டர்.ராஜமணி அவர்கள் எருசலேமிலும்,செசரியாவிலும்,எபேசுவிலும் **அந்நியபாஷை** பேசினார்கள். இதை அந்நியபாஷை அடையாளத்துக்கு சாட்சி என்கிறார். அதோடு பெந்தேகோஸ்தே சபை மக்கள் பேசும் அந்நியபாஷையும் பாஸ்டர்.ராஜமணியாகிய நான் பேசும் **அந்நியபாஷையுமே** சாட்சியாகும். இதற்கு மேல் வேறு எங்கும் விளக்கத்திற்கு அலையவேண்டியதில்லையே? என்று எழுதியுள்ளார்.

இவர்கள் பேசியது **அந்நியபாஷையே** இல்லையே? அது வெறும் **உளரல்தானே,** இன்று பெந்தேகோஸ்தே சபைகள் யாவும் பேசுவது **அந்நியபாஷையே** அல்லவே- வெரும் உளரல்கள்தானே. பெந்தேகோஸ்தே சபையில் உள்ள சின்ன பிள்ளைகள் பெந்தேகோஸ்தே ஆராதனை முடித்து வீட்டில் வந்து தங்கள் பாஸ்டர் அந்நியபாஷை பேசுவதை போல் **உளரி** காண்பித்து சிரிக்கிறார்கள். எங்கள் பாஸ்டர் எப்போதும் **தளபுள இக்கரபுளா ஷக்கர** பலா என்று இதையேதான் எப்போதும் பேசிக்கொண்டே எங்களையும் பேச சொல்லுவார்!. நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்கொண்டே பாஸ்டர் பேசுவதைபோல் பேசுவோம். பள்ளிக்கூடத்திலும் பேசுவோம்,ஸ்கூல் பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும்போது பேசுவோம், அப்போது அதே சபையை சேர்ந்த மற்ற **பையன் கூறுவானாம்**, டேய் நம்மைவிட அந்த

பையன் பாஸ்டர் பேசுவதை அப்படியே **மிமிக்கிரி** செய்து காட்டுவான். பாஸ்டர் பேசுவதை அப்படியே பேசுவான். அந்த **குறிப்பிட்ட 3 வார்த்தைகளை தவிர அந்நியபாஷையாக எங்கள் பாஸ்டர் வாயிலிருந்து** புதிதாக ஒரு வார்த்தையும் வந்ததில்லை. இதுதான் இன்றைய **பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள்** பேசும் **அந்நியபாஷை.** இவர்கள் சபையில் வளர்ந்த பள்ளி பிள்ளைகளுக்கு விளங்குகிறது. இது போலியான பாஷை என்பது. ஆனால் சபை மக்களுக்கு இன்னும் விளங்கவில்லை. இதை பரிசுத்தாவியானவர் பேச வைக்கிறார் என்று இவர்கள் கூறுவதான் கொடுமை.

## பாஸ்டர்.ராஜமணி அவர்கள் எழுதிய பொய்:

எருசலேமில் கூடியிருந்த அப்போஸ்தலர் இயேசுவின் தாயாகிய மரியாள் மற்றும் சீஷர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினபோது அவர்கள் வெவ்வேறு பாஷைகளை பேச தொடங்கினார்கள்.

இவர்கள் **அந்நியபாஷைகளை** பேசத் தொடங்கினபோது அங்கே பாஷைகளை **புரிந்துக்கொண்ட எவருமே இல்லை** என்று பகிரங்கமாக அவர் எழுதியது உண்மையை மறைக்கும் மிகப் பெரிய **பொய்** ஆகும். மேலும் அவர் எழுதியதாவது. சீஷர்கள் அந்த இடத்தில் **அந்நியபாஷைகளை** பேசியது யாரிடம் பேசினார்கள்?

நூற்றிருபது பேரும் **அந்நியபாஷைகளில் பேசின சத்தம்** உண்டானபோதுதான் ஆட்கள் அங்கு வந்துகூட ஆரம்பித்தார்கள் என்று வேதம் வாசிக்காதவரைப்போல எழுதியிருக்கிறார். அவர்களெல்லாரும் ஆராதனைக்கு வருவதுபோல் வந்து உட்கார்ந்து செய்தி கேட்க வரவில்லை. **இது என்ன கூச்சல் என்று வேடிக்கை பார்க்க வந்தார்கள்** என்று இவ்வளவு அனுபவம் உள்ள பாஸ்டர் எழுதலாமா? இப்படிப்பட்ட ஒரு அபத்தமான விளக்கம் பாஸ்டர்.ராஜாமணி அவர்களிடமிருந்து நான் எதிர்ப்பார்க்கவே இல்லை.

## இவர் எழுதியதற்கு கீழே எழுதும் என் விளக்கத்தையும் வேத வசனத்தோடு ஒப்பிட்டு பாருங்கள்.

அப் 2:6ல் **அந்த சத்தம் உண்டானபோது** திரளான **ஜனங்கள் கூடிவந்தார்கள்** என்று தெளிவாக எழுதியதை பாஸ்டர்.ராஜமணி அவர்கள் ஏன் மறைக்கிறார்?. அதற்கு பதிலாக **அந்நியபாஷையில் பேசிய சத்தம் உண்டானபோதுதான்** ஆட்கள் வந்துகூட ஆரம்பித்தார்கள் என்று எப்படி தைரியமாக வசனத்தை மாற்றி பொய்யாய் எழுத இவருக்கு தைரியம் வந்தது?. மேலும் அவர் எழுதியதாவது அந்த வீட்டின் எதிரே கூடிய அவர்களெல்லாம் ஆராதனைக்கு வருவதுபோல் வந்து உட்கார்ந்து செய்தி கேட்க வரவில்லை. இவர்கள் **வெவ்வேறு பாஷையில்** பேசியதை **இது என்ன கூச்சல்** என்று வேடிக்கை பார்க்கவே வந்தார்கள் என்று எழுதியுள்ளார். இவர் சபையில் **அந்நியபாஷை** என்ற பெயரில் போடும் **கூச்சலைப்போல** இது! என்று நினைத்து எழுதியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

' **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் AOG,TPM,IPC சபை பாஸ்டர்களுக்கு** டாக்டர்.புஷ்பராஜாகிய நான் தாழ்மையாய் கேட்டுக்கொள்வது, உங்கள் கையில் உள்ள வேத புத்தகமும், **பாஸ்டர்.ராஜாமணி** பாஸ்டர் அவர்கள் கையில் உள்ள வேத புத்தகமும் ஒன்றுதானே!.

மேலே பாஸ்டர் அவர்கள் **வேத வசனத்தை மறைத்தது வசனத்தில் இல்லாததை பொய்யாய்** கூறியதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? தயவுசெய்து பதில் எழுதுங்கள்.

**வெவ்வேறு பாஷைகள்- பல்வேறு பாஷைகளில் பேசினார்கள்.**

எருசலேமிலிருந்த ஜனங்கள் யாவரும் அந்தமேல் அறைவீட்டின்முன் ஓடிவந்து பார்க்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில்தான் சீஷர்கள் **பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்** என்று எழுதியிருக்கிறது. அப் 2:4.

**வரம் Gift கொடை - பரிசு:**

இங்கு பரிசுத்த ஆவியானவர் அந்த சீஷர்களுக்கு தந்தருளிய **வரத்தின்படியே(Gift) (பரிசு)** சீஷர்கள் யாவரும் வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள் என்று எழுதப்பட்டது. **வரம் Gitf வேறு- அடையாளம் வேறு** என்பதை இதை வாசிக்கும் பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சீஷர்கள் மேல்அறையில் காத்திருந்தபோது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவில்லை என்பதை TPM சபைக்காரர்கள் குறிப்பாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். **காத்திருப்பு** கூட்டத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் நிறைவு கிடைக்கும் என்பது **ஏமாற்று உபதேசம்** ஆகும்.

சீஷர்கள் ஜனங்கள் முன்வந்து நின்றபின்தான் **பரிசுத்த ஆவியானவர்** சீஷர்களை நிறைக்கிறார். அடுத்தது சீஷர்கள் ஒரு பாஷையில் பேசவில்லை. ஒரே வாயிலிருந்து பல பாஷைகளில் ஆவியானவர் தந்த வரத்தினால் பேசினார்கள் என்று எழுதியிருக்கிறது. அப்படியே கவனிக்கவேண்டிய மற்றொரு முக்கிய விஷயம். சீஷர்கள் வெவ்வேறு பாஷையில் பேசும்போது **அந்தந்த பாஷைக்குரிய நபர்கள்** அங்கு நிற்கிறார்கள்? அங்கு நிற்கும் விதவிதமான பாஷைக்காரர்களுக்கும் சீஷர்கள் பேசுவதன் அர்த்தம் புரிகிறது. விளங்காத பாஷையில் சீஷர்கள் பேசவில்லை. இந்த இடத்தில் பவுல் கூறியதை **ஞாபகப்படுத்தி கொள்வது நல்லது.** 1கொரி 14:10 உலகத்திலே எத்தனையோ **விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது.** அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாமல் இல்லை.

1 கொரி 14:11ல் பேசும் அந்த பாஷையை **மேல்வீட்டின் முன் நிற்கும்** சீஷர்களுக்கு விளங்காமல் இருந்தால் அந்த பாஷைகளை பேசிய சீஷர்களுக்கோ(பாஸ்டருக்கோ) முன்பாக நிற்பவன் அந்நியனாக இருப்பானே?. பேசுகிற சீஷனும் அல்லது **அந்நியபாஷை** பேசும்(பாஸ்டரும்) சபை மக்களுக்கு **அந்நியனாக இருப்பார்களே?** என்கிறார்.(வசனத்தை விளங்க வைக்க இடைசேர்க்கை செய்வேன்). 1 கொரி 14:9ல் நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் பேசாவிட்டால், நீங்கள் பேசியது இன்னது என்று எப்படி தெரியும்?

## பெந்தேகோஸ்தே சபையினர் அறிந்துக்கொள்ளவேண்டியது:

**அந்நியபாஷை பேசுகிறேன்** என்று பேசிய உங்களுக்கும் **புரியாத கேட்கிற** ஜனங்களுக்கும் **விளங்காத பாஷை** என்ற பெயரில் பேசி உளராதீர்கள். கர்த்தர் எங்களை பேச வைத்தார் என்று பழியை ஆவியானவர் மேல் போடாதீர்கள். ஆவியானவர் எதையும் தெளிவாக ஒழுங்காக செய்வார். உங்களை ஜெபத்தில்கூட **உளரவைக்கமாட்டார்** என்பதையும் உணருங்கள்.

அப்படி ஜெபத்தில் **அந்நியபாஷை பேசியதாக வேதத்தில் எங்கும் இல்லை.** சம்பவம் நடந்த அந்த சூழ்நிலையில் பேதுரு ஜனங்களிடம் கூறும்போது இப்போது **காண்கிறதும், கேட்கிறதுமாகிய** இதை (**பரிசுத்த ஆவியானவர்**) **பொழிந்தருளினார்** மக்கள் **காண்கிறது என்ன? எதை மக்கள் கண்டார்கள்?** என்ற கேள்விக்கு பதில் கண்டுபிடியுங்கள்.

**காண் கிறது:**

மோசே காலத்தில் முட்செடியில் அக்கினி ஜீவாலை வழியாக கர்த்தர் மோசேயுடன் பேசியதைப்போல் இன்று சீஷர்கள்மேல் **தீ ஜீவாலை** எரிகிறதை மக்கள் கண்டார்கள். நாம் ஆராதிக்கும் தேவனின் ஆட்கள்தான் இவர்கள் என்பதை **தீ ஜீவாலை** உறுதிப்படுத்தினது. இதைத்தான் நீங்கள் **கண்டது** என்று பேதுரு கூறினார்.

**கேட் கிறது:**

**அந்நியபாஷை** சத்தத்தை அல்ல. ஒரே ஒரு சீஷன் வாய்வழியாக **பற்பல பாஷைகளில்** பேசுகிறதை கேட்டார்கள். **வெவ்வேறு பாஷையில்** பேசினார்கள்.அந்தந்த பாஷையை **அறிந்தவனுக்கு** இவர்கள் பேசினதின் அர்த்தம் விளங்கினது.

அந்த **குறிப்பிட்ட பாஷையை அறியாதவர்களுக்கு சீஷர்கள் அந்நியபாஷையில் பேசியது குடிகாரன் போதையில் பேசுவதைப்போல் இருந்தது.**

வெவ்வேறு பாஷைகளில் பேசின **சீஷர்கள் பிரசங்கம்** செய்யவில்லை. தேவ **மகத்துவத்தை** பேசினார்கள் என்று எழுதியிருக்கிறது.

அதை குறிப்பிட்டு அந்த யூதர்கள் கூறியாதவது **தேவ மகத்துவத்தை** இவர்கள் பேசுகிறதை கேட்கிறாமே? என்றார்கள்.

இந்த **தேவ மகத்துவம் என்றால் என்ன?**

**யூதர்களின் முற்பிதாக்கள் தங்கள் தலைமுறை பிள்ளைகளுக்கு கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களை** எப்படியெல்லாம் **அற்புதங்களின்** வழியாக வழி நடத்தினார் என்பதையும், எகிப்தின் **அடிமைத் தனத்திலிருந்து** கர்த்தர் தம் மக்களை விடுவித்து **கடலை பிளந்து** வானத்திலிருந்து **சைவ உணவு, அசைவ உணவு வரவழைத்து,** (Poison) விஷ ஊற்றுகளைகூட **ஊற்று தொடங்கும்** இடத்திலிருந்தே அதிலிருந்த **விஷத்தை ஒரு மர கொம்பினால் முறித்து** மக்கள் குடிக்கும் **மதுர நீராக மாற்றி, தாகம் தீர்த்து உயிர்பிழைக்க** வைத்ததையெல்லாம், **எண்ணி எண்ணி** அதை பாடலாக்கி **40 வருடங்கள் பாலைவனத்தில் நடந்து செல்லும்போது** தங்கள் கால்வலியை மறக்க அன்று அற்புதங்கள் செய்துவிடுவித்த **கர்த்தரை புகழ்ந்துகொண்டே பாடிய பாட்டின் வரிகள்தான் சீஷர்கள் ஆவியின் நிறைவில் அவரவர்களுக்கு விளங்கும் பாஷையில் தேவ மகத்துவத்தை விவரித்து பேசினதை** கேட்டதாகும்.

## கைதிகள் பாடமறுத்த தேவ மகத்துவ பாடல்கள். சங் 137

இந்த தேவ மகத்துவத்தின் பாடல்களை தலைமுறை தலைமுறையாக பாடி **தங்கள் பிள்ளைகளுக்கும் முற்பிதாக்கள்** கற்றுக்கொடுப்பார்கள் அந்த **மகத்துவத்தை கேட்பதே** ஒரு இன்பம்.

**யூதர்கள்** கைதிகளாக சிறைப்பிடிக்கப்பட்டபோது **அதிகாரிகள் கைதிகளை நடத்தி** கூட்டி செல்லும் வழியில் கைதிகள் இளைப்பாற **பாபிலோன் ஆறுகளின்** கரையில் உட்கார்ந்து ஒய்வுவெடுக்கும்போது அந்த அதிகாரிகள் யூத கைதிகளை நோக்கி நீங்கள் உங்கள் முற்பிதாக்கள் **உங்கள் தெய்வம்** செய்த **கிருபைகளை பாடலாக பாடுவீர்களாமே?** அந்த **பாடலை நீங்கள்பாட நாங்களும் கேட்க ஆசைப்படுகிறோம்** என்றார்கள். வாழ்க்கையை இழந்து போர் கைதிகளாக பயணித்துக்கொண்டிருக்கும் **யூதர்கள் இனி என்ன** நடக்கப்போகிறதோ? எப்படி நம்மை கொடுமைபடுத்துவார்களோ? என்ற கவலையிலும் பயத்திலும் இருந்த **அந்த சூழ்நிலையில்** அந்த மக்களின் அன்றைய மனோ நிலைமையத்தான் **சங்கீதக்காரன் 137ம் சங்கீதத்தில் பாடலாக, கவியாக** எழுதி வைத்தான்.

சங் 137 **பாபிலோன் ஆறுகள் அருகே** (By the Rivers of Babilon) நாங்கள் உட்கார்ந்து கர்த்தரின் கிருபையோடு சீயோனில் கர்த்தரரோடு வாழ்ந்த அந்த இனிமையான வாழ்க்கையை நினைத்து அழுதோம், கர்த்தருக்கு **கீழ்படியாமல்போனதால்** தானே அடிக்கடி இப்படி எதிரிகளிடம் அகப்பட்டு வாழ்க்கையை இழக்கிறோம் என்று அழுதுக் கொண்டிருக்கும்போது, எங்களை **சிறைப்பிடித்தவர்களும், எங்களை பாழாக்கினாவர் களுமான** அந்த அதிகாரிகள் எங்களை **அந்த பாடலை (தேவ மகத்துவத்தை) பாட** சொன்னார்கள். ஆண்டவர் செய்த கிருபைகளை நினைத்து அந்த (மங்கள பாட்டை)பாட சொன்னார்கள்.

**உயிருள்ள எங்கள் தெய்வத்தின் பாடலை விக்கிரங்களை ஆராதிக்கும் அந்த அந்நிய தேசத்தில் பாடுவதெப்படி**? என்று புலம்பினார்கள். அந்த சம்பவத்தை தான் 137ம் சங்கீதத்தில் வாசிக்கிறோம்.

அந்த **தேவ மகத்துவங்கள்** தான் எருசலேமில் சீஷர்கள் வாயிலிருந்து வெளிவந்தது ஆகும். அதை கேட்ட மாத்திரத்தில் இது **நம்ம பாட்டு** நம் முன்னோர்கள் நமக்கு **கற்றுக்கொடுத்த பாட்டு** இந்த மகத்துவங்கள் அந்நியதேசத்தாருக்கும், விக்கிரகத்தை வணங்குபவர்களுக்கும் **வேற்று இனத்தவர்களுக்கும்** தெரியவே தெரியாது. இப்பாடலை குறித்து புறஜாதி அதிகாரிகள் கேள்விபட்டு **137ம் சங்கீதத்தில்** யூதர்களை சிறை பிடித்த அதிகாரிகள் பாட சொன்னபோது கூட யூதர்கள் அந்த பாட்டை பாடவில்லை. இந்த தேவ மகத்துவம் யாருக்கும் தெரியாது.

ஆனால் இந்த சீஷர்கள் தேவ மகத்துவம் கூறுவதை நாம் கேட்கிறாமே? அப்படியானால் **இவர்களும் நம் முற்பிதாக்கள் ஆராதித்த தெய்வத்தை** ஆராதிப்பவர்கள்தான்.

ஆகவே இவர்கள் வாயிலிருந்து இதற்குமேல் வேறு என்ன தெய்வ வார்த்தை வெளிவரப்போகிறது என்பதை கேட்போம் என்று அந்த ஜனங்கள் ஆவலாய் நிற்க.

அப்போது தான் **பேதுரு** எழுந்து நின்று விளக்கம் கொடுத்து பேச தொடங்குகிறார். இந்த தேவ மகத்துவத்துக்கு உரிமையுள்ளவரான பிதாவானவர் அனுப்பின **மேசியாதான்** இயேசுகிறிஸ்து. நம்மை எல்லாரையும் இரட்சிக்க வந்த அந்த **இயேசுவைத்தான் நீங்கள்**

**எல்லாரும் சேர்ந்து கதற கதற சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டீர்கள்.** ஆனால் **பிதாவோ** அவரை உயிரோடு எழுப்பி அவர் எங்களுக்கும் தரிசனம் தந்து இன்றும் **நம் மத்தியில் உயிரோடு இருக்கிறார்.** நீங்கள் **கொலை செய்த** இயேசுவை இப்போதும் நீங்கள் **இரட்சிக்க வந்த மேசியா** அவர்தான் என்று ஏற்றுக்கொண்டால் அவர் **சிந்தின இரத்தம் உங்கள் கொலை குற்றத்தை** மன்னிக்கும் என்று நீங்கள் நம்பினால், **கர்த்தர் உங்களை மன்னித்து ஏற்றுக்கொள்வார்** அதன்மூலம் அவர் மேலும் மகிமைப்படுவார். அதை கூறத்தான் **எங்களை இங்கு உங்கள் மத்தியில் அனுப்பினார்** என்று பிரசங்கித்து முடித்தார்.

அன்று மட்டும் அந்த ஒரு நிகழ்ச்சியில் **பரிசுத்த ஆவியானவரின் அந்த முதல்** இறக்கத்தில் காணப்பட்ட தீ நாளங்களும் **தீ ஜீவாலைகளும்** கேட்கப்பட்ட **இடிமுழக்க** சத்தத்தையும் அவர்கள் **கண்டார்கள். கேட்டார்கள்.**

ஒரு நபரின் வாய் வழியே **பல பாஷைகள்** வெளிவந்து தங்களை விளங்க வைத்ததை அறிந்து பேதுரு நிகழ்த்திய அந்த **முதல் பிரசங்கத்தில் 3000 ஆயிரம் பேர் மேசியா இயேசுதான்** என்று ஏற்றுக்கொண்டு தங்கள் தவறை **பேதுருவின் பிரசங்கத்தின் மூலம்** உணர்ந்து **இருதயத்தில் குத்தப்பட்டு** உடனே இனி **நாங்கள் என்ன செய்யவேண்டும்?** என்று கேட்க, **ஞானஸ்நானம் ஆலோசனை பேதுரு மூலமாக** பெற்று **முதல் கிறிஸ்தவ சபை** உருவானது.

## இதுதான் புதிய ஏற்பாட்டு யுகம்:

இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் **பெந்தேகோஸ்தே சபைகள் இன்னும்** பழைய ஏற்பாட்டு **பிரசங்கத்தையே பிரசங்கித்து,** பழைய ஏற்பாட்டு காலத்தில் மக்கள் செய்த ஆர்ப்பாட்டம்போல் கைகளை தட்டியும் கைகளை உயர தூக்கிபிடித்து **டாட்டா** காண்பிப்பதைபோல் ஆட்டியும் ஆர்பரித்து **சிலர் நடனமாடி, சிலர் சிரித்து, சிலர் பாடல் பாடும்போது கூவி** விசில் அடித்து இப்படியாக **போலி** பரவச உணர்ச்சிகளில் **பரிசுத்த ஆவி** என்ற பெயரில் **சபைமக்களை** பெந்தேகோஸ்தே **பாஸ்டர்கள்** வழிநடத்தி வசனத்தைவிட்டு மக்களை விலக்கி பரவசப்படுத்தி சபை மக்களை **தன் வசப்படுத்திக் கொள்கிறார்கள்.**

இவர்கள் சபைகளில் காணப்படும் **பாடல் வாத்திய கருவிகளின் கவர்ச்சி மக்களை** வசனத்தைவிட்டு விலக்கிப் போட்டது.

இதுதான் இன்றை **பெந்தேகோஸ்தே சபையின் நிலை.** பாஸ்டர்.ராஜாமணி அவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

**பாஸ்டர்.ராஜாமணி** அவர்கள் **சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்** என்று பவுல் 2 கொரி 13:1ஐ சுட்டிக்காட்டி வக்கீல்கள் தங்கள் வாத திறமையால் நம்ப வைப்பதுபோல் எழுதியுள்ளார்.

மேலே குறிப்பிட்ட வசனத்துக்கும், **அந்நியபாஷைக்கும் சம்பந்தமேது?** மேலும் அவரின் கூற்றின்படி பார்த்தால் இவர் சுட்டிக்காட்டிய 3 சாட்சிகளில் இவரின் **முதல் பொய் சாட்சியே** அடிப்பட்டு போயிற்றே?

' **எருசலேமில்** சீஷர்கள் பேசியது **வெவ்வேறு பாஷைகள்** என்றும் அது பரிசுத்த ஆவியனாவரின் நிறைவுக்கு **அடையாளம் அல்ல** அது **வரமாக(Gift) அருளப்பட்டது** என்றும் வசன தெளிவோடு எழுதப்பட்டுள்ளதே?

**நான் கொடுத்த இந்த வசன விளக்கத்தை விட வேறு ஆதாரம் தேவையா?,** என்றாலும் **பாஸ்டர்.ராஜமணி** அவர்கள் எழுதிய மற்ற இரண்டு சாட்சிகளான

**1.செசரியா அப் 10:45,**

**2. எபேசு 19:1-6** ஆகிய வசனங்கள் பேசப்பட்ட பாஷைகளைப்பற்றியும் அடுத்த ஜாமக்காரனில் கர்த்தருக்கு சித்தமானால் விளக்கிவேன்.

வாசகர்கள் **அந்நியபாஷை குழப்பத்தைக்குறித்து** இதுவரை ஜாமக்காரனில் எழுதியதை சேர்த்து வைத்து முழு விவரமும் எழுதி முடித்தபின் புத்தகமாக பைண்ட் செய்துக்கொள்ளவும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள்.

அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# TUTICORIN -NAZARETH CSI DIOCESE
# MILLERPURAM CSI St.PAULS CHURCH CONVENTION






தூத்துக்கு-நாசரேத் சி.எஸ்.ஐ திருமண்டலத்தில் உள்ள மில்லர்புரம் தூய பவுல் ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் கூட்டங்களுக்கு **Rev.ஆபிரகாம் பீட்டர்** தலைமை ஆயர் அவர்களும், உதவி ஆயர்.**SAC.தேவசகாயம்** அவர்களும் ஜெபித்து நடத்திய தலைமையில் நடந்த இக்கூட்டங்களில் தேவ ஆவியானவர் என்னை மிகச்சிறப்பாக வசனங்கள் கூறி உபயோகித்தார். 3 நாள் கன்வென்ஷன் கூட்டங்களும் மிகவும் ஆசீர்வாதமாக நடந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# KANYAKUMARI CSI DIOCESE
# ANANDANADARGUDI CSI CHURCH CONVENTION







**கன்னியாகுமரி** சி.எஸ்.ஐ திருமண்டலத்தில் உள்ள அனந்தநாடர்குடி என்ற இடத்தில் உள்ள ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடந்தது. **Rev.டேனியல் தேவதாசன்** அவர்கள் தலைமையில் நடந்த இக்கூட்டங்களில் ஆவியானவர் என்னை மிகச்சிறப்பாக பயன்படுத்தினார். கன்வென்ஷன் கூட்டங்கள் நடந்த எல்லா நாட்களிலும் கலந்துக்கொண்ட மக்களை ஆசீர்வதித்தார். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# TIRUNELVELI CSI DIOCESE
# KALLIDAIKURICHI CSI CHURCH CONVENTION




திருநெல்வேலி சி.எஸ்.ஐ திருமண்டத்தில் உள்ள கல்லிடைக்குறிச்சி ஆலயத்தில் நடந்த கன்வென்ஷன் கூட்டங்களுக்கு **Rev.சாமுவேல்** அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டங்களில் ஆவியானவர் என்னை மிகச்சிறப்பாக பயன்படுத்தினார். மக்களும் ஆவலுடன் கர்த்தரின் வசனங்களை கேட்டார்கள். 3 நாள் கன்வென்ஷன் கூட்டங்களும் மிகவும் ஆசீர்வாதமாக நடந்தது. தேவனுக்கே மகிமை உண்டவதாக.

## முக்கிய அறிவிப்பு:

‘ என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம்.

‘ இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

### காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# www.jamakaran.com



Rt.Rev.Royce Manoj Victor

**வாழ்த்துகிறோம்!** **வரவேற்கிறோம்!!**

## மலபார் சிஎஸ்ஐ டையோசிஸ்

**புதிய பிஷப் அவர்கள் மலபாரில் பிறந்து மலபார் பாஸல்மிஷன் சபையில் வளர்ந்து ஆயராகி இன்று பாஸல் மிஷன்(CSI)சபையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட முதல் பிஷப் என்ற சரித்திர சிறப்பு பெற்றவராகிறார். இத்தனை காலமாக மத்திய கேரளா கோட்டயம்-திருவல்லா பாகங்களிலுள்ள ஆயர்கள்தான் மலபார் (வடக்குகேரளா டையோசிஸ்க்கு) பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டனர். அந்த நிலையை இம்முறை மலபார் மக்கள் மாற்றி மலபார் மண்ணில் பிறந்த ஒருவரை பிஷப்பாக அதிக ஓட்டு வித்தியாசத்தில் ஜெயிக்கவைத்து அதன்பின் பல போராட்டங்களுக்கு பிறகு** Rt.Rev.Royce Manoj Victor **அவர்களை பிஷப்பாக தெரிந்தெடுத்த மலபார் சிஎஸ்ஐ சபை மக்களை வாழ்த்துகிறேன். பிஷப் அவர்களையும் வாழ்த்துகிறேன். இவர் சமூக சேவைக்கு அதிக முன்னுரிமை கொடுப்பவர் என்று அறியப்படுகிறார், அந்த ஆர்வத்தை மலபார் சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், கவனம் செலுத்தும் வகையில் பிஷப் அவர்கள் திட்டமிட்டால் சபைமக்களுக்கும் நல்லது. கர்த்தரின் நாமம் மகிமைப்படும். பிஷப் அவர்களை நானும், ஜாமக்காரன் வாசகர்களும் ஜெபத்தில் தாங்குவோம் என்று அறிவிக்க ஆசைப்படுகிறேன்.**

**JUNE 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.